[illegible]

[illegible] ஸாரங்கதர நாடகம்

பதி

(19)

T.D. R.C. 3247.

R.R. No. 11-1-1894.

O-,2MKC1,K
M94
116089

1894

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JAN 94
MADRAS.

உ

கடவுள்துணை.

# காராளன் கார்காத்த நாடகம்.

இஃது

பொள்ளாச்சித் தாலூகா ஆனைமலையிலிருக்கும் இருபத்திநான்குமனை

ம-ள-ள-ஸ்ரீ வெங்கிடசெட்டியார் குமாரர்

உபாத்தியாயர் கிருஷ்ணசெட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு;

கோயமுத்தூர்

ம-ள-ள-ஸ்ரீ க. நமசிவாயச்செட்டியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு

பொள்ளாச்சித் தாலூகா ஊற்றுக்குழி

ஜமீன்தார் ம-ள-ள-ஸ்ரீ முத்துராமசுவாமி காலிங்கராய

துரையவர்கள்

கோயமுத்தூர் தாலூகா மாதப்பட்டி

ம-ள-ள-ஸ்ரீ உடையாக்கவுண்டரவர்கள் குமாரர்

ம-ள-ஸ்ரீ ஆண்டிகவுண்டரவர்கள்

செங்குட்டைப்பாளையம் ம-ள-ள-ஸ்ரீ சின்னக் கண்டிகவுண்டரவர்கள்

இத்தனையாளர்களது பேருதவியால்

கோயமுத்தூர்

கிரந்தம் சுவாமியையரவர்களது

வித்தியாபாநு அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விஜய-௵ சித்திரை-௴.

O--,2MKC1,K
M94

116089



## இந்நாடகத்துக்குப் பொருளுதவிசெய்த பிரபுக்களின் நாமதேயங்கள்.

சுப்பேகவுண்டனூர் முத்துமாரப்பகவுண்டர்

கருப்பம்பாளயம் அ. பழனியப்பகவுண்டர்

சிங்காநல்லூர் குமாரசாமிக்கவுண்டர்

பொள்ளாச்சி மணியம் சித்தாண்டிக்கவுண்டர்

அப்பாச்சிக்கவுண்டனூர் முத்துச்சாமிக்கவுண்டர்

வாழைக்கொம்பு இராமசாமிக்கவுண்டர்

சென்னியூர் மணியம் இரங்கசாமிக்கவுண்டர்

ஷையூர் பெ. செல்லப்பகவுண்டர்

சிங்கராயம்பாளையம் செல்லப்பகவுண்டர்

ஷையூர் அ. இரங்கசாமிக்கவுண்டர்

சென்னருயம்பாளையம் மா. பெரியாக்கவுண்டர்

வேட்டைக்காரனூர் பளனிக்கவுண்டர்

அங்கலக்குரிச்சி மலையாக்கவுண்டர்

ஆனைமலை சி. இராமசாமிக்கவுண்டர்

வன்னிக்குமாரர்முத்தூர் குப்பாண்டாக்கவுண்டர்

கெத்தூர் ருயக்கக்கவுண்டர்

குளத்துப்புத்தூர் சுப்பேகவுண்டர்

குழுக்கைப்பாரை ரகுநாதகவுண்டர்

## நூற்பெருமை

இதனால் சகலருக்குந் தெரியப்படுத்துவது யெங்களமெனின் இந்த கார்த்தித்த சோமவாரவிரத நாடகம் பாடிக் கோயமுத்தூர் தாலூக்கா மாதம்பட்டியிலிருக்கும் காங்கயம் பரஞ்சேதி நாட்

டைச் சார்ந்த பாருசேரிவழி செம்பக்கூட்டம் உடையார்கவுண் டரவர்கள் குமாரர் பேரையூரென்னும் மேலச்சிதம்பரத்துத் தேவஸ்தானத்துக்கு தர்மகர்த்தாவாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆண்டிபகவுண் டரவர்கள் சமுகத்தில் அரங்கேற்றல் செய்து முடியுங்காலத்தில் சொக்கநாதசுவாமி மீனாட்சியம்மன் கிருபையாலும் கார்காத்த வேளாளப்பிரபுவினுடைய சத்தியவாய்மையினாலும் மிகுதியாகிய மழை வர்சித்து யாவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனதால் இந்தப் பெருமைபொருந்திய கார்கார்த்த நாடகத்தை யாவர்களும் பக்தியோடு படித்தாலும் படிக்கக் கேள்வியுற்றவர்களாலும் அன்னாட்டுக்கு மிகுதியாகிய மாரிபெய்யும் சகலபாவங்களும், விமோசனமாகும் புத்திரசந்தானங்களைக்கும் வேளாண்மையிருத்துச் செல்வமுண்டாகும் மென்றறிக.



சிவமயம்.

# காராளன் கார்கார்த்த நாடகம்.

## சாற்றுக்கவிகள்.

ஆனைமலையிலிருக்கும் இன்னூலாசிரியரோடு கற்றுவந்தவருமியும் இச்சவிருயருக்குச் சகுர்த்த தாயாதிவற்களுமியும் அதிசயிக்டகுமாகிய சின்னருசெட்டியார் குமாரர் இராமசாமிக்கவிராயரியற்றியது.

ஆசிரியவிருத்தம்.

திருமருவுபொலிசனிமேல்முகிலுலவுகுடவளைச்
 செழுமணிமிகொளிமினுஞ்
செங்குமுதவெண்குவளைதிங்கள்கிரணங்களொயத்
 தோகுதிதள்ளிக்குமலரச்
செந்தேதிரைநதரிவிசங்கேததும்புதிறை
 இல்யமாவாழினகிருள்
தினமல்குவெள்ளிவிற்பரர்களற்புதமதாய்ச்
 செய்யுமண்டபஞ்சிரக்க
வரமுகவுகரணிவறையருகானுமனையின்ஙின்
 வந்துற்றமதிசிரேஷ்டன்
வற்ச்செருமிசெஞ்சுமதமந்தசமிருவிருனைச்சேர்
 மாரட்டியகோத்திரத்தோன்
மங்களசுபிகிரிதமாவெங்கிடவேளன்பிடும்
 மதனனையகவிவேதன்
மன்னனுகண்ணிவளார்பண்ணிசைப்புலவர்கள்
 மகிளபெருங்கவிபாசங்கள்

தறணியிற்பெருமையுற்றாகரியினுடையசமு
ரஸ்மிதந்துதிசெயன்பன்
சற்சனர்களினிதுடைருநாயிச்சைசொருநேகிமில
சாஸ்த்திரங்கதெரிந்தோன்
சாரமகிரீரக்தாரிகல்கூடமிற்
றற்பருணக்சோதி
தசமாறுநான்குதிருவுயிதவிளையாட்டிடிற்
சமெனுணன்றனக்கு
பெருமைமிகுவேளாளகருமையாய்ப்பிணைசொலிப்
பிணைத்தகார்களைவிடுத்த
பெருசரிதைமுறையிற்திருவிலக்தனிலெவர்கள்
பெட்புறவேநாடகமதாய்
பிரபலத்திலகவெண்கமலமகளுதவியது
பெற்றுவரிகிருஷ்ணராமன்
பிரியமொடுபரவையுதுதருமமுதகிதேகளி
பெயரத்தகன்றமிழின்மாதோ.

ஆனைமலை வேதார்த்தம் லரம்பரசவதம் குப்புசாமி ஐயங்கார் குமா
ரர் சேஷய்யங்கார் ருலியற்றியது.

எழுசீர் ஆசிரியம்.

அரவுறவமரியுறவமையவுவமெனலந்த
வாதியானந்தசோதி
அருபத்துநான்குவிளையாடல்செய்தென்மதுரை
அரசுபுரிசுந்தரமாறன்
கருவிற்குருவுருவிலொருவப்பிடித்ததனைக்
கட்டுரைத்திட்டகாலை
கவிராயிரங்காதகமன்மிகுவேளாள
காருண்யநிலகொருவன்



கருதரியபெருதவியாகவம்மங்குலே
கட்டுவிடுவித்தகாதை
களபகிரிவழுதியருதசநான்குமிலையிற்
கண்யமாரட்டியகோத்திரன்
கருவுடையகார்கார்த்தநாடகந்தனையுலகர்
கண்ணமாரயின்தமெனவே
கவிவாணர்திலகனெனமகிழ்கிருஷ்ணனுவலன்
களிப்பொடுவியற்றினானே.

ஆனைமலை கல்யா கணக்குமுத்து வீரப்பபிள்ளையவர்களியற்
றிய ஆசிரியவிருத்தம்.

சித்திதருமாறுகதட்பமுறையாகமச்
சேவர்பதிமுனிவரருந்
திகழுநாளிலாரைதுயதருமேயடைருவர்கள்
செந்திருமகிழ்ந்துசேர்வன்
பக்திதருசேரமவாரத்தினதுபெருமையாற்
பாரின்முதிலசெழியனுணைப்
பந்தனம்பூண்டதனைவிரிக்கிரவேண்டுதல்செய்
பண்புமிகுபிளையுரைத்தப
புத்திதருவேளாளவுத்தமன்கார்காத்த
புண்யதேர்ல்கதையயுலகிற்
போற்றுநாடகமதெனநாட்டிருன்யானைமலை
புகழுமாரெட்டியகோத்ரன்
முத்திதருமதுரைதனில்ரத்னமணிபகர்குலன்
முதன்மைமாறாதமனையாள்
முத்தமிட்பாவலன்கிருஷ்ணப்பநாவலன்
மொழிபுனைதிருநூலாமே.

மேற்படி இராமசாமிக்கவிராயர் சகோதரர் பொன்னுசாமி செட்டியாரியற்றியது.

அறுசீர்கழிநெடில்.

மாவினியவுந்திவந்தநான்முகத்தோன்
மனைவிதனைநோக்கியுயர்வாரிக்குள்ளந்த
ஞாலமிசைவேளாளன்காரகார்த்த
நாடகத்தைச்சிறப்பாய்நீநவில்வாயென்னச்

சீலமிகுமிருபத்துநாவெல்லாரிற்
றிகழுமரிகிருஷ்ணப்பவாணன்றனின்
வாலைசரஸ்பதிமாதுவந்தமர்ந்து
மதுரகவியென்றனும்வளர்த்துளாளே.

ஜாரிபாளையப்பட்டு ஆற்றுக்குளி சமஸ்தானம் வெங்கடாசல உபாத்தியாயர் குமாரர் குப்புமுத்து உபாத்தியாயரியற்றியது.

சீர்பூத்தசயகிரிமாசெட்டியகோத்ரன்
ஸ்ரீராமசாமிதன்மரபில்வந்த
ஏர்பூத்தகிருஷ்ணசாமிக்கவிஞன்
விருநிலத்திற்புலவோர்கள்மகிழ்ந்துகூடப்

பார்காத்தமூவரசர்தன்னிலுக்கிர
பாண்டியராசன்விலங்கிலிட்டிருந்த
காரகார்த்தவேளாளன்சரிதைதன்னைக்
காட்டினானாடகமாச்சூட்டினானே.

கதைவரலாறு.

நேரிசையாசிரியப்பா.

அலைகடல்சூழு முலகிடைமதுரைப்
பதியுமசோக்கர் கதிநெறுலுக்கர
மாரபாண்டியனும் பாரியரக்கதி
மதியுடன்கூடி ஆதிமுறைசெய்கோ.



லாறுமன்னாளல் கோணிலைபிசகி
மழைபெருக்கற்று விளைவுகள்குறைய
சேரசோழரசர் செல்வர்களுடனே
பொதிகையிற்சென்று விதிவழிதெரிந்த.

கோமுனிதன்னை நேமமதாகக்
கண்டுவணங்கிக் கொண்டல்பொழியா
தேதெனக்கேட்க மாதவமுனிவன்
கூறியேயின்றுள் சூரியன்செவ்வாய்.

குருசுக்கிரர்முன் வருகிறபடியால
பன்னிரண்டாண்டு தன்னமுவுலகில்
மாரிகளில்லை நேருடன்நீங்கள்
பலமெலாமுகலுஞ் சிவசோமவார.

விரதமதனையே முறையொடுநோற்று
அந்தரத்தேகி யிந்திரனிடத்தி
லிசைத்திடுமென்று ரகஸ்தியநாதர்
அன்னதோர்நாளின் மன்னர்கள்மூவர்.

திங்களன்றென்னைத் துங்கமதாகச்
செய்துபின்னின்று டெய்நம்பரரைசக்
கண்டுரைசெய்ய அன்றவர்க்கிருக்கை
தந்திடச்செவியுற் யிந்திரன்சிம்மா.

தனமிசையேறிக் கனமுடனிருக்க
சேரசோழற்கு மாரியைத்தந்து
சிங்காரதம்மைப் பொங்கியனைத்து
கனமிகவுள்ள மணிவடந்தன்னை.

வஞ்சகமாக நெஞ்சிலிருந்து
ஆரமேதாங்கு மார்பவென்றுரைக்கத்
தென்னவநப்போ தன்னகர்சேரக்
காரதுவந்து சேரசோழரசர்.

நாட்டினிற்பெய்து வாட்டமற்றிருககத்
தண்டமிழ்மதுரை பண்டைபோலிருக்கும்
நாளினிற்பொதிகை வாள்மிருகங்கள்
பயிர்களையழிக்க ஜெயபாண்டிமன்னன்.


காட்டகஞ்சென்று வேட்டைகளாடி
வருகயிற்பொதிகை பெருமலைச்சார்பி
லிந்திரன்கார்கள் வந்துதான்மேய
கட்டித்தளைந்து யிட்டனன்சிறையில்.

வச்சிரபாணி யச்சினைமறிந்து
போரதுபுரிய விருடன்வளையை
யொசிந்தனன்றென்னன் புரந்தரன்மகுடம்
பொடிபடக்கண்டு திடமிகவற்று.

நேசமதாக வாசகமெழுத
விசயனுக்கன்பன் றூபிதனுசொல்லக்
காருணன்சிலன் நேராகவந்து
மதுரைமன்னவனுக் கிதமிகசொல்லி.

கார்களைவிடுக்க பார்தனின்மாரி
பெய்திடவெல்லா முய்துயர்வாள்
சோமவாரத்து நேமவிருதத்தாற்
காந்திமாமதியிப் வாயந்துநற்கெற்பம்.

பாலகன்பிறக்கச் சீலமாவளர்த்து
வீரபாண்டியனெனப் பேருமைழ்த்தி
கூடலம்பதிசேய் கோன்முறையாக
நாடியரச நாட்டிவாழ்ந்தனரே.



காப்பு.

## அருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சீர்வளரும்பொன்னுலகத்திறைவனுக்குக்காராளச்
செல்வ, நிம்பத்
தார்வளரும்பாண்டியன்பாற்பிணைப்புரைத்துமாரிதந்த
சரிதைதன்னை
பார்வளரநாடகசங்கீதமொடுசெந்தமிழாற்
பாடுதற்குக்
கார்வளருங்கரிமுகவன்பெருமைமிகுமிருமலர்த்தாள்
காப்பதாமே.

சொக்கேசர் துதி.

காவளைக்குங்கற்பகநாட்டிந்திரற்குமதுரையிலிங்கலை
களித்துமல்கும்
பூவசியகுலதிலகக்காராளன்நார்காத்த
புனிதகாதை
நாவசைத்துத்தமிழினிற்நாடகம்பாடக்கிருபைசெய்வாய்
நாரியோடு
சேவிசையினிவருஞ்சொக்கேசாவுனதடியைச்
சிந்திப்பேனே.

## மஹாவிஷ்ணு துதி.

விண்டுவிலாவைப்பூட்டிவேலையைக்கடைந்துமுன்னா
ளண்டருக்கமுதுதந்தஹரியரீபதுமநாபா
கொண்டலைக்கார்த்தகங்காகுலனுயர்சரிதைதன்னை
தண்டமிழாலேகூறச்சரணமேபோற்றினேனே.

## தண்டபாணி துதி.

விஞ்சைமிகுத்திடுமதுரைப்பாண்டிமன்னன்
விண்ணூடெளிவிதனைவிடாதுபற்ற
வஞ்சமிலாவேளாளன்பிணையுரைத்து
மாரிதந்தகதைக்குதவிவாவாமெய்யா
கஞ்சமலர்தடஞ்சூழும்பளனிவாசாக்
காங்கயனேயாருமுகக்கந்தனுதா
வஞ்சிவள்ளிதெய்வானைபாகாமோகா
மான்மருகாவேன்முருகாமயில்வாகோனே.

## காமன் துதி.

அலைகடல்சூழுலகமதிற்சிரப்புற்றோங்கும்
அணிமதுரைமேவுகாராளகோத்திரன்
நலமுடனேகார்விடுத்தசரிதைதன்னை
நாடகஞ்செந்தமிழ்தினாநவில்வதற்குப்
பலகலைதெளிவுபொருள்மதுரவாக்குப்
பாலிப்பாய்நான்முகனார்பக்கலொழுங்
கலைமகளேபரிபுரங்களணிந்தசெம்பொற்
களலிணையைமரவாதுகருதினேனே.

## அவையடக்கம்.

கற்றநாவலர்முன்னாமன்கவிற்றிரமுரைத்தற்போலும்
முற்றறிவோர்க்குமூடன்முழுமதியுணர்த்தல்போலும்
வெற்றிசேர்கலுழன்முன்புவிட்டில்கள்பரந்தற்போலும்
சொற்றநன்வேளாளன்கார்துடக்கதுங்கதையைத்தானே.



## சிறப்புப்பாயிரம்.

பரஞ்சோதிமுனிவருரைத்திடுமெட்டெட்டுப்
படலமெனுந்திருவிளையாடலிலேயிந்திரன்
திருமுடிமேல்வளையெறிந்தபாண்டிமன்னன்
ஜெயம்பெற்றப்புயல்தனைச்சேறகவன்றுட்
பெருமைமிகுகாராளகுலத்தோன்வந்துப்
பிணைநின்றுகார்விடுத்துமாரிதந்தச்
சரிதைநிசர்த்தானைமலைமேவுங்கிருஷ்ணத்
தமிழ்வாணன்நாடகமாச்சாற்றினானே.

## விநாயகர்வருகிற விருத்தம்.

கந்தமலர்ப்பொழில்சூழுமதுரைமேவுங்
காராளன்பிணையுரைத்தசரித்திரத்தை
விந்தைமிகுவுலகமெங்கும்புகழ்ந்துபாட
வேண்டுவரந்தரவாகுமீதிலேறி
சுந்தரபொற்சதங்கையிருகளலிற்கொஞ்ச
தொகுதொகுதிந்திமிதாகுதித்தோமென்னக்
கந்தனுக்குமுன்னுதித்தவைங்கரத்துக்
கணபதிவந்தார்சபையோர்களிக்கத்தானே.

தரு — ராகம் — மத்யமாவதி — ஆதி — தாளம்.

பல்லவி

கணபதிதோன்றினாரே சிவசுதக் கணபதிதோன்றினாரே

அனுபல்லவி

கணபதிதோன்றினார் துணிவுடநடியார்கள்
பிணியுளதகற்றி நற் குணமதுதருஞானக் (கணபதி)

சரணங்கள்

வேளமுகமுமிருதாளிற் சதங்கைகொஞ்சப்
பேழைவயறும்பெருச் சாளிவாகனமீதுக் (கணபதி)
ஜென்மபவத்தால்வருங் கன்மவினையகற்றி
யின்மையிற்றெழுபவர் நன்மைபெரவழிக்கும் (கணபதி)

அன்பரடிவணைகோர் கொம்புமொழிதுலங்க
விளைபமுட்டேநெருமன்பர்துதித்திணங்கக் (கணபதி)
சங்கரநருள்பாலன் பொங்கரவணிசீலன்
துங்கமுடையானால் மெங்கும்புகள்விசாலன் (கணபதி)

குருக்கள்வருகிற விருத்தம்.

வைணகமானதியுஞ்சூழ்ந்த மதுரையம்பதியின்மேவும்
தூயவெங்கயமுகத்துச் சோதியைப்போற்றிசெய்ய
மெய்யின்வெண்ணீரணிந்து வேண்டிபூஷிணைகளொடு
பையவேநடந்துவேதப் பட்டருக்கோன்வினுரே.

குருக்கள்வருகிற - தரு - ராகம் - தோடி - அடதாளம்.

பல்லவி

வேதியர்வந்தாரே பூசைகள்செய்ய வேதியர்வந்தாரே

அனுபல்லவி

வேதியர்வந்தாரே யாதிமறையோதி
சீதரன்மருகனுர் பாதந்தியானிக்க (வேதி)

சரணங்கள்

கையிற்குடலைப் மெய்யிற்பூணூலும்
ஒய்யாரமாகவேதூய்யவெண்ணீரிட்டு (வேதி)
பட்டுச்சோமன்மடியிட்டுக்கட்டிக்கொண்டு
திட்டமாய்ப்பூசைசெய் தட்டுகளுடகே (வேதி)
விந்தையான வாசச்சந்தனம்பூசியே
சிந்தைமகிழ்வொடுமுந்துசிகையுடன் (வேதி)
அப்பழம்பொரியவல்முப்பழந்தேன்குளல்
செப்பமதாக்கொண்டு விற்பனமாப்பண்டு. (வேதி)

கட்டியன்வருகிற - விருத்தம்.

வட்டநற்பாகைமின்ன மார்பினிற்பணிதுலங்கச்
சட்டைகளணிந்துசாலிற் றண்டைவெண்டயங்கள்பூண்டு
திட்டநல்லுக்கரமாரஜெயபாண்டியராசன்வாசற்
கட்டியகாரன்வந்துகளிப்பிற்றேன்றினானே.



கட்டியக்காரன்வருகிற தரு - ராகம் - சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி

வந்தானேகட்டியக்காரன் பெர்சரிக்கைசெய்ய
வாறானேகட்டியக்காரன்.

அனுபல்லவி

வந்தான்கட்டியக்காரன் சிந்தைமகிழ்ந்துபேசி
விந்தையுடனுக்கரம வீரபாண்டியன்வாசல். (வந்தா)

சரணங்கள்

தங்கநிஜாரிலங்கவே சரிகையிட்ட
தலையிற்பாகைதுலங்கவே
துங்கப்பணிகுலுங்கவே யிடையதனிற்
சுரிகைகூர்வாளிலங்கவே

இங்கிதக்கச்சைகட்டி யிருகையசைத்துக்கொட்டி
யெங்கும்புகளைகட்டி யெதுர்த்தாரைவெல்லுங்கெட்டி (வந்)

கடகதங்கணமின்னவே வச்ரமிழைத்த
கணையாழிவிறற்பன்னவே
வடிவுகேடகந்துன்னவே பளபளென்ன
வாங்குகையினில்நண்ணவே

திடமொழியான்மிரட்டிங் சிவந்தவிழியுருட்டி
படியோர்சொல்லைப்புரட்டிப் பரிசனத்தைத்திரட்டி (வந்தா)

அதட்டிமீசைமுறுக்கியே கவசமிட்டு
அரையிற்கச்சையிறுக்கியே
குதட்டிப்பயில்பெருக்கியே குதிகுதித்து
கோபித்துப்பல்நெரிக்கியே

கதித்தவெப்புலிபோலே கருணைசற்றில்லாமலே [வந்தா
யெதுக்தோற்கஞ்சிடாமலே யிருக்குந்தென்னன்முன்னாலே

கட்டியன்சொல்(வேறு) தரு - ராகம் - ஆனந்தபயிரவி - அடதாளம்.

கண்ணிகள்

மதுரைமாநகருள்ளமனிதரே பாண்டி
மஹாராஜாவருகுறார் கொலுவிலே

சதிருடனெல்லோரும்வாருங்கள் தெருத்
தண்ணிற்சிரப்பாகச்சேருங்கள்

சித்திரமாடங்களெங்கெங்கும் நல்ல
சிங்காரலங்காரஞ்செய்யுங்கள்

முத்தினாற்றோரணங்கட்டுங்கள் பந்தல்
முழுவதும்பவழக்கால்நட்டுங்கள்

சொக்கர்மீனாக்ஷியாராலய மெங்கும்
துலங்கச்சித்திரவேலைசெய்யுங்கள்

திக்கிருந்தான்குமதிரவே பேரி
திடுகரிம்திமிர்போடுங்கள்

மாணிக்கதீபங்களேற்றுங்கள் மிரு
வாசப்பொடிமலர்தூற்றுங்கள்

ஆணிப்பொன்மாலையைத்திரையுங்கள் சந்த
நத்தர்பன்னீரெடுத்திரையுங்கள்

விந்தையாய்நிர்த்தனமாடுங்கள் கன்றுய்
மெல்லியர்சோபனம்பாடுங்கள்

மந்திரிமாரெல்லாம்வாருங்கள் வேத
மனுநெறிமுறைகண்டுகூருங்கள்

கட்டியன்சொல் - பொது - வசனம்

அகோதெப்படியென்றால் ராசாதிராசன் ராசவுத்தண்டன் மலையத்துவச பாண்டியனுக்கு மீனாக்ஷியம்மையாரேதடாதகை பிராட்டியாக அவதரித்து சொக்கநாதக் கடவுளே சுந்தரபாண்டியனாகவந்து விவாகஞ்செய்து அவர் நெற்றிக்கண்ணேறுக்கத்தினாலே தடாதகையம்மன் திருவயற்றிலேவுற்பவித்த உக்கிரகுமாரபாண்டிய மஹாராசன் கொலுவுக்கு வருகிறபடியால் சகலரும் வெச்சரிக்கை பருக்கு.



உக்கிரகுமாரபாண்டியன் வருகிற விருத்தம்.

திறைகொடுத்தரசர்டிகாள்ந்திடக்கவிவாணர்
செந்தமிட்பனுவல்பாடத்
தெளிகலையமைச்சர்மனுநீதியுரைசெய்திடச்
செயபேரிமுரசமார்ப்ப
அருமறையின்முனிவோர்களாசிபலகூறிட
வரிவையர்கள்நடனமாட
அருகினிற்கட்டியம்போடவேசாமரைக
ளணிகவரிநின்றிரட்டத்
திரிபுராந்தகசொக்கநாதர்மீனாக்ஷியார்
திருவடிக்கன்புசெய்து
தென்மதுரைநகருறுமன்னற்குமன்னவன்
செண்டுவெளிவேல்பெற்றவன்
தருமநெறிமிகுசத்தியசந்தனன்அஷ்டதிசை
தான்வெற்றிபெற்றதீரன்
தகமைபெருவுக்கிரகுமாரபாண்டியன்கொலுத்
தனில்வந்துமேவினானே.

உக்கிரகுமாரபாண்டியன்வருகிற - தரு - ரா - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

ராசராசர்க்கெல்லாம் ராசனுக்கிரகுமார
ராசன்கொலுவிருந்தாரே.

அனுபல்லவி.

தேசதேசமன்னர்கள் திறைதந்தடிவணங்கச்
செங்கோன்மனுநெறியாலெங்குமடர்ந்தோங்க

சரணங்கள்.

கட்டியங்கூறிடக் கவரியிருபாற்போட
கலைகள்தெரிந்தநான்கு கவிநாவலர்கள்பாட
திட்டமுடனமைச்சர் சிறந்தருகினிற்கூட
தெரிவையர்கள்நடனத்திகர்தமென்றினிதாட (ராஜ)

வெற்றிமுரசதிரமீனக்கொடிபரக்க
விளங்குதடபுயத்தில்வேம்பிற்றார்சிறக்க
பொறைசெறிமுடியருளார்த்தி பொங்கமுடனெடுக்க
புஷ்பமாரிவானோர்கள் பூமியில்வருஷிக்க (ராஜ)

எத்திசையினுஞ்செங்கோலின்பமிகுந்துநாட்டி
ஈசனடிமலரை யிருதயந்தனிற்பூட்டி
சத்தமேகாதிபனைத் தான்வெற்றிபெருமேட்டி
சந்தமதனைவெல்லத் தக்கவடிவுகாட்டி (ராஜ)

மன்றூங்குடிபடையை நன்னயத்தொடுகோர்த்து
மாற்றலர்விருதுகள் மணிக்கலனிற்சேர்த்து
மின்னவிரியகலைமேவியுக்கரத்தோடார்த்து
செல்வனைசெண்டுகையின் விளங்கவேமிகப்பார்த்து (ராஜ)

பாண்டியன்போற்றி விருத்தம்.

கங்கையுமதியுஞ்சூடுங்கருணையங்கடலேபோற்றி
அங்கயற்கண்ணிபாகத்தமர்ந்திடுநாதாபோற்றி
பொங்கரவந்தைப்பூண்டபுனிதசெஞ்சடையாபோற்றி
துங்கவெள்விடையிலேறுஞ்சொக்கநாதாபோற்றி.

பாண்டியன் மந்திரிக்கிசொல் விருத்தம்.

நன்மதியமைச்சேகேளாய்நானிலம்புரக்கத்தக்க
தென்மதுரையின்கணுள்ளதேசதாவலையங்கள்
தன்மைசேர்நான்குவாணஜாதியோர்குறைவில்லாமல்
செம்மையோடொன்றுமாரிதிங்களிற்பொழிவதோசொல்வாய்.



பாண்டியன்தேசவிசாரணை-தரு-ராகம்-சங்கராபரணம்-ரூபக-தாளம்.

பல்லவி.

மதியிலுயர்ந்தமந்திரி திருமதுரைமண்டலம்வளமையோ.

அநுபல்லவி.

கதிதருஞ்சொக்கராலயந்தன்னிலுங்
கணபதிதிருமாலயன்முன்னிலும்
விதிமுறைதிரிகாலமென்னிலும்
விந்தையாப்பூசனைதந்தாரோபன்னலும் (மதியி)

சரணங்கள்.

மாதமதில்மூன்றுமாரிவந்தெய்யவும்
வையகத்தோரெல்லாமெய்மைசொல்லுய்யவும்
காதலாய்முப்பத்திரண்டறமிய்யவுங்
கற்றிடுநாவலர்முற்றுறைசெய்யவும் (மதியி)

சத்திரங்கடன்னிற்குணங்கள்மேலவும்
சங்கீதவோதைகளெங்கெங்கும்பாலவும்
சித்திரமாடந்துலக்கங்களாகவுஞ்
தேங்கமள்சோலையிற்பூங்குயில்கூவவும் (மதியி)

வைகைநதியில்வருபுனல்மல்கவும்
மாவுங்கதலிபலாக்கனிநல்கவும்
செய்யவயற்கன்னல்செந்நெல்கள்பல்கவுஞ்
சேவும்புலியொருதாவினிற்புல்கவும் (மதியி)

சிங்கமதக்கரிசேர்ந்துபடுக்கவும்
திக்குள்ளமன்னர்கள்கப்பங்கொடுக்கவும்
மங்கையருடனற்கின்பந்தொடுக்கவும்
மாற்றலர்வந்தடிபோற்றிநடக்கவும் (மதியி)

பாண்டியருஜன் சொல் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி நமது மதுருபுரிக்கிச்சேர்ந்த தேசமெங்கும் மாதமும்மாரிபொழியவும் வருடமுப்போகம் விளையவும் குடிகள் ஆரிலொருகடமை கொடுக்கவும் சொக்கநாதர் ரூசுஷி சௌந்தரியாளாலயங்களில் திரிகால பூசை நடக்கவும் நம ஆக்கினைக்கடங்கி புலியும் பசுவும் ஓர் துரையிலே ஜலங்குடிக்கவும் கிரியுஞ் சற்பமும் ஓரிடத்திலே வாசஞ்செய்யவும் யாதொருவருக்கும் அச்சம் பயமில்லாமல் வாழ்ந்துவருகிறார்களா சொல்லும்பிள்ளாய் மந்திரி.

மந்திரி சொல் வசனம்.

சரணஞ் சரணமையா வுக்ரகுமாரபாண்டியமஹா ராஜே தேவரீருடைய செங்கோன்முறையாக சகலபிராணிகளும் அடங்கி மாதமும்மாரி வருடமுப்போகம் விளைந்து குடிகள் ஆரிலொரு கடமை கொடுத்து அச்சம்பயமில்லாமல் சிரப்பாக வாழ்ந்து வருகிறார்களையா சாமி.

பாண்டியராசன் மந்திரிக்கிச்சொல் விருத்தம்.

சதுர்விதக்கலைகள்கற்றதன்மைசேரமைச்சேகேளாய்
சுதையினைப்பளித்தநிஞ்சொற்றேகையாள்காந்திமாதை
அதிதுரிதத்திலேகிஅழைத்தெந்தன்சமுகந்தன்னில்
விதமுடன்வருவாயிப்போவிளம்பியபடியேதானே.

பாண்டியன் மந்திரிக்கிச்சொல் வசனம்.

அகோவாரும் பிள்ளாய் மந்திரி நமது அரண்மனையின்கண் சென்று நமது மனைவியாகிய காந்திமதிப்பெண்ணை அதிசீக்கிரமாக சமுகத்தில் அழைத்துவாரும்பிள்ளாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே மகாபாக்கியமையாசாமி.



காந்திமதி வருகிற விருத்தம்.

கந்தரப்பணிகள்பூண்டுகோளியர்மருங்குசூள
சிந்துரத்திலதமின்னசேல்விழிகுழைகளாடாவக்
கொந்தலர்மாலைசூடிக்குளவில்வண்டிசைகள்பன்னக்
கந்தமாமலர்த்தாணங்கைகாந்திமாமதிவந்தாளே.

காந்திமதி வருகிற-தரு-ரா-கமாசு ஆதிதாளம்.

பல்லவி.

மாதுகாந்திமதிவந்தாளே யெழில்மிகுந்த
மாதுகாந்திமதிவந்தாளே.

அநுபல்லவி.

மாதுகாந்திமதிவந்தாள் மன்னவன்சமுகந்தேடி
தாதியர்களுடன்கூடி சந்தமும்விளையாடி (மாது)

சரணங்கள்.

அன்னந்தனைப்பளித்த அளகுநடைகுலுங்க
வன்னப்பணிகடிரு மார்பிலணிந்திலங்க (மாது)

முத்துமணிகள்மின்ன மோகனமாலைதன்னத்
தத்திதாதத்தெய்யென்னத் தாளமத்தழும்பன்ன (மாது)

செங்கைவளைகுலுங்கச் சித்திரமுகந்துலங்கக்
கொங்கைக்குடமலுங்கக் கோலச்சடையிலங்க (மாது)

மின்னைப்பொருவுந்திரு மேனிப்ளபளென்னச்
சின்னவிடைச்சரிகைச் சேலைதளதளென்ன (மாது)

காந்திமதிசொல் விருத்தம்.

மன்னர்க்குமன்னாபோற்றிமதுரையாளரசேபோற்றி
தென்னவர்குலத்தாபோற்றிதிருவளர்மார்பாபோற்றி
கன்னல்வின்மதனாபோற்றிகண்டருத்தண்டாபோற்றி
என்னையாள்நாதாபோற்றியிஸ்பவிபாலாபோற்றி.

வசனம்.

அடியாள் சரணம் சரணம் யென்பிராணநாயகா தேவரீர் யென்னை தங்கள் சமுகத்துக்கு அழைத்த காரணத்தையின்னதென்று அருள்செய்ய வேண்டுங்களையாசாமி.

உக்ரகுமாரபாண்டியன் காந்திமதிக்கி சொல் விருத்தம்.

காதலுக்கிசைந்தயெந்தன்காந்திமாமதியேமங்காய்
பூதலந்தன்னின்மாரிபொருந்தவேயில்லாதாலே
வாதையுற்றலைந்துமாக்கள்மடிவதுநாமன்செய்த
தீதுகள்தானோமுன்னோர்செய்திடும்வினைகடானோ.

பாண்டியன்-தரு-ராகம்-சங்கருபரணம்-ரூபகம்.

பல்லவி.

மங்கைகாந்திமதியேபெண்ணே மாரியில்லாதகாரியமேதோ.
வைத்தமனச் சத்தியமே பொய்த்தரசு வுய்த்தனமோ. (மங்)

அனுபல்லவி.

சொக்கரடியைத்தொழுதிடாம
லெக்களிப்புட்டிருந்தமோபெண்ணே.
சொன்னவுரை நன்னயமாப் பின்னளியப் பன்னிநமோ (மங்)

சரணங்கள்.

நீதிதவரியரசுபுரிந்து நீண்டவுலகை
யாண்டமோ பெண்ணே
நேசமற காசிநிவாள் பூசுரரை யேசினமோ (மங்)

வருமையுறவேபிரரையடித்து
வன்கொடுமைகள்செய்தமோ பெண்ணே.
விந்திரவோர் நொந்துளலச் சிந்தனையைத் தந்தனமோ (மங்)



பொய்குலைமதுக்களவுகாமம்
போதவேபஞ்சபாதகம் பெண்ணே
புந்தருமித பத்தினியே சித்தமதில் வைத்தனமோ (மங்)

சேரசோளவரசருடனே
தென்பொதிகைமேவகஸ்தியரிடம்
சேவிலையே போய்வரவே நேயமொடு வாய்மையருள். (மங்)

பாண்டியன்சொல் வசனம்.

வாரும்பெண்ணே காந்திமதிமாதே யிந்த மதுரைப்பட்டினத்தின்கண் மனுநீதி தவருமற் செங்கோல் செலுத்திவந்தோம் இப்போது யேதுகாரணமோ நமது நாட்டிலும் சேர சோளர் நாடுகளிலும் மாரியில்லாமல் சகல ஜீவபிராணிகளும் துன்பப்படுகிறபடியால் யானும் சேர சோளரிருவரும் பொதிகையிற்சென்று அகஸ்திய முனிவரைக்கண்டு தெளிந்து வருகிறோம் உன்பாங்கிமார்களுடனே அரண்மனையில் வீற்றிரும்பெண்ணே பிராணநாயகி.

காந்திமதிசொல் விருத்தம்.

மாதவவகஸ்தியநாதர்மலரடிகாணபேசென்ற
காதல்சேர்மன்னுயிர்த்தக்கமெனிதன்னையாள
யேதுகாரணமோபாலகில்லாமலிருக்கின்ற
தீதுகடனைத்தெரிந்துதேவரீர்வருளுவீரே.

காந்திமதிசொல்-தரு-ராக-தோடி-ஆதிதாளம்

பல்லவி

மன்னுபாலகில்லையே மதுரையாள மன்னுபாலகில்லையே.

அனுபல்லவி.

மன்னுபாலகில்லா தென்னகாரணந்தானோ
வன்னமுடிபுனைந்ததென்னவரசசெய்ய (மன்னு)

சரணங்கள்.

புத்ரனில்லாதவுண்டி புழுவுக்குச் சமமென்று
விஸ்தாரமாகச்சொல்வார் மேதினிதனிலுள்ளோர் (மன்ன)

பாலனில்லாதவற்குப் பரகதியில்லையென்று
மேலவருறைத்தாரே யிக்கண்டனாயனார்க்கு (மன்ன)

பிள்ளையில்லாதவொரு பெரும்பாவியென்றுலகோர்
விள்ளவுமானேனே வேலாங்கடலையன்ற (மன்ன)

அத்தன் சொக்கேசரடி அன்னை மீனாக்ஷிபதம்
நித்தந்துதித்துவந்தோம் நிலத்தன்னையாள (மன்ன)

கும்பமுனியிடத்திற் கூறிக்குறைதெரிந்து
யின்பமுடனவருவீ ரென்னைமணம்புணர்ந்த (மன்ன)

காந்திமதிசொல் விருத்தம்.

வணங்கிடாமுடிபுனைந்தமன்னவாமதுரைமூதூ
ரிணங்கியேயாளப்பாலனில்லாதகாரணத்தை
மணங்கமழ்பொதிகைமேவுமாமுனிதன்னைக்கேட்டுச்
சிணங்கொண்டுவருவீரெந்தன்சிந்தையுமகிழத்தானே.

காந்திமதி வசனம்.

அடியாள் சரணஞ்சரணம் யென் பிராணநாயகரே தேவரீர் சர்வகாரணங்களுந் தெரிந்த அகஸ்த்திய முனிவரிடத்தில் போயி ரபடியால் யிந்த மதுராபுரிநாட்டை அரசாட்சிசெய்ய புத்திரனில்லாத காரணத்தை யின்னதென்று தெரிந்து வரவேண்டுங்களையா சாமி.

பாண்டியன் வசனம்.

அப்படியேகேட்டுவருகுரேனடி பெண்ணேகாந்திமதியே.



13

பாண்டியன் மந்திரிக்குசொல் விருத்தம்.

பொன்னுயிரமைச்சேகேளாயினிதுடன்சேரசோழ
மன்னர்களிடத்திற்சென்றுமாரியில்லாததாலே.
தன்னிகரில்லாஞானத்தமிழ்முனீந்திரனைக்காண
தன்னையுந்துடனழைத்துநாடியேவருகுவாயே.

பாண்டியன் வசனம்.

வாரும்பிள்ளாய் மந்திரி மாதம் மும்மாரி பெய்யா வரப்பட்ட யிந்தமூன்று நாடுகளிலும் மழையில்லாமற்றுன்பப்படுகிற காரணந்தெரியும் பொருட்டுப் பொதிகைக்குப் போகவேண்டியிருப்பதால் திருக்கோட்டைக்குச் சென்று சேரமன்னனையும் உறையூருக்குச்சென்று சோழமன்னனையும் நம்ம சமுகத்துக்கு அழைத்து வாரும்பிள்ளாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

பொது விருத்தம்.

மதுரைமன்னவனுரைத்தவாய்மைகேட்டமைச்சனேகி
விதமுடன்சேரசோழவேந்தர்பாலருகும்போது
சதிர்மறைமாதருட்சாமரையிரட்டவன்புட
டதிபதியானமன்னரகைசெய்திடவந்தாரே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் உக்ரகுமார பாண்டியராஜன் சொன்னவசனத்தைக்கேட்டு மந்திரி சேரசோழர் நாட்டுக்கு வருகும்போது அவ்வரசர்களிருவரும் கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

சேரன் சோழன் கொலுவுக்கு வருகிற விருத்தம்.

கவிழ்ந்தனிபிரித்தபொன்மகுடங்கள்மின்னவே
நற்பவனிகள்சோதியே

காரியர்கீர்த்தனம்புரியவேமந்திரிகள்
நன்னெறிவழங்கிவரவே
கவிவாணர்புகழ்ந்துபிரபந்தங்கள்பாடவே
கவரிமங்கையரிரட்டக்
கனபேரிதுந்துமிகளார்த்திடவுமதிவட்டக்
காந்திவெண்குடைகள்கவிய
புவியாளுமன்னர்பலர்சூழ்ந்திடத்திருக்கோட்டை
புரியாளுசேரமன்னன்
பொன்வழமிகுந்தவுறையூராளுசோளமன்
பூசுரர்களாசிகூறச்
சிவகிரியினுமையவளனுதினமுமரவாது
சிந்தைகுளிர கொண்டவீரர்
சிங்காதனந்திகழ்செங்கோல்செலுத்திடச்
சிறப்புடன்வருகிறாரே.

சேரன் சோளன் வருகிற — தரு — ராகம் — கல்யாணி — அடதாளம்.

பல்லவி.

ராஜராஜர்கள்வந்தார் சேரசோளராஜர் கொலுவிருந்தார்.

அனுபல்லவி.

மாசில்லாநவரத்னமாமணிமுடிமின்ன
மந்திரிமார்மிருதங்கிரகங்கள்பன்ன (ராஜராஜ)

சரணங்கள்.

கட்டியக்காரிடக்கவிவாணர்புகள்பாடக்
கனகமுடிதரித்தகாவலர்புடைசூட (ராஜராஜ)

மார்பிற்பணிதுலங்கவாளுறக்கொடியாட
மங்கையர்கடனங்களிங்கிதத்துடனாட (ராஜராஜ)



114

வெற்றிக்கொடிபாக்கவீரமுரசடிக்க
வேதமறையோர்சீர்வாதமதுகொடுக்க (ராஜராஜ)

தேவர்மலர்சொரியசெங்கோன்முறைக்குரிய
சீரானதிருமார்பின்வீரமங்கையுறைய (ராஜராஜ)

மந்திரி சேரசோளராசருக்குசொல் விருத்தம்.

சீருடனுலகம்போற்றுஞ்சேரசோளராசரேறே
மாரியேபொழியாதாலேமாமுனியகஸ்தியன்பால்
நேருடன்போவதற்குநிமிசத்திலழைத்துவுக்ர
மாரபாண்டியராஜேந்திரன்வரச்சொன்னார்வருகுவீரே.

மந்திரி வசனம்.

கேளுங்கள் சேரசோளமன்னர்களே நம்ம மூன்று நாடுகளிலுமழை யில்லாமலிருக்கப்பட்ட காரணந்தெரியும் பொருட்டு அகஸ்திய முனிவரிடத்திற் போகுறதற்காக வெங்கள் உக்ரகுமார மஹாராஜ அழைத்துவரச்சொன்னார் வாருங்களையா அரசர்களே.

சேரன் சோளன் வசனம்.

அப்படியேபோவோம் வாரும்பிள்ளாய் மந்திரி.

சேரன் சோளன் மதுரைக்கி வருகிற விருத்தம்.

சேனைகள்சூழவெற்றித்திருச்சின்னமார்ப்பரிக்க
வானுறக்கொடிகளோங்கமங்கலம்பலவழங்க
ஏனையமன்னர்கூடயிருபுரங்கவரிவீச
மீனவன்மதுரைநோக்கிவேந்தரும்வருகின்றாரே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் உக்ரகுமாரபாண்டியன் அழைத்தாரென்று மந்திரி கூறக்கேட்டுச் சேரசோளராசரிருவர்களும் அதிசீக்கிரமாகக் கொலுவை விட்டெழுந்து சகலவாத்திய கோசத்துடனே மதுரைப்பட்டணம்நோக்கி வருகிற விதங்காண்க.

சேரசோளரசர் மதுரைக்கி வருகுற-தரு-ராகாப்பி அடதாளம்.

ஓரடி கண்ணிகள்.

மன்னர்சேரசொளற் மதுருபுரிநோக்கி
வாருடகேட்டந்தார் வழிதனேவேகமொடுகடந்தார்
இங்கிதமாகவேசங்கீதமாதர்க ளெங்கெங்குமாடிவர
மந்திரிமார்கள் துக்கமாய்க்கூடிவர.

கடககங்கணமின்னக்கதிர் மணிமுடி துன்னக்
காவலர்புடைசூளமருமன்னர் மேவிநின்றடிதாழ
வாருவலையமிருகோளிற் சிரந்திடமல்லரிதான்முளங்க
குடமுளா சல்லரிமேல்விளங்க.

சனகமலரிக்குதடையணியாகவே சதிரவனமரைக்க
வேதியருமோனர் சதிருயமரையுரைக்க
கொண்டலுலவுநற்றண்டலைசூள்ந்திடுங் கூடல்நகரடைந்தார்
பாண்டியமன்னன் னுடிவிடைபகர்ந்தான்.

பாண்டியன் சேரசோளருக்கு விருத்தம்.

அரசரேவாரீர்காமளரநெறிதவறுச்செங்கோன்
முறையுடகாண்டோரமின்றுமூன்றுநாடதனின்மாரி
குறைந்துமேவிளைவில்லாமற்குடிபடையானதெல்லாம்
வறுமையுற்றலைவதென்னமார்க்கமோவரிகிலோமே.

பாண்டியன்செல் - தரு - காப்பி - அடதாளம்

கண்ணிகள்.

வளமைமிகுத்தநம்வையகமூன்றினும் மன்னர்களே இன்னாள்
மாரியில்லாதென்னகாரியமோகாணும் மன்னர்களே

நீதியில்லாமலேபூதலங்கார்த்தமோ மன்னர்களே நம்ம
நெஞ்சரியப்பொருவஞ்சம்விளைத்தமோ மன்னர்களே



அன்னதானப்பலன்றன்னைமறந்தோமோ மன்னர்களே வேத
வந்தனைமுனோரைநொந்திடச்செய்தமோ மன்னர்களே

ஈசநடியாரைமோசங்கள்செய்தமோ மன்னர்களே மன
இஷ்டருக்குப்பெருங்கஷ்டம் விளைத்தோமோ மன்னர்களே

தேவாலயங்களைவாகாயிடித்தேமோ மன்னர்களே யென்ன
செய்குவோமழையின்றுட் பெய்யாமலில்லையே மன்னர்களே

கற்புள்ளமாதரைத்தப்பிதஞ்சொன்னமோ மன்னர்களே பஞ்ச
காலத்திலேயென்னகொலங்கள்செய்தமோ மன்னர்களே.

பாண்டியன் விருத்தம்.

பாரிநிற்குடிகளெல்லாம்பரதவித்தலைந்துவாக்கள்
நீரில்லாதுயிர்கள்விடடுநெடியதண்டலையைந்த
காரியமெதுவோவென்றுநலையுணரக்கஸ்தியன்பாற்
கூரியேவருவோம்வாரீருன்றியிற்சென்றுதானே.

வசனம்.

அகோவாருங்கள் சேரசோளமன்னர்களே யென்ன தீவினை
செய்து செங்கோலாண்டமோ நம்ம மூன்று நாடுகளிலும் மாரி
யில்லாமல் குடி படையானதெல்லாமிகவுந்துன்பப்படவும் பசுக்
களுக்கு தலைந்திடையாமல் மலைபருபதங்களிலேபோய்த் திரியவும்
கூபதடாகஞ்சோலைகளெல்லாம் தீய்ந்து நெருப்புப்பற்றியெரிகி
றகாரணமென்னாமோவென்று பொதிகைமலைக்கிச் சென்று சகல
கலைசமுத்திரந்த அகஸ்தியநாதனைத் தெரிசித்து வரலாம் வாருங்
கள் அரசர்களே.

சேரசோளசொல் வசனம்.

அப்படியேயாகத சர்வகலைக்கியானியாகிய தமிழ்முனிநாதனை
தெரிசித்து வரலாம் பாண்டியராசனே.

சேரசோளபாண்டியர் பொதிகைக்குப்போகும் விருத்தம்.

காரதுபொழியாதாலேகாசினியாருமன்னர்
சேரவேமூன்றுபேருந்தென்பொதிகாசலத்தை
நேருடனோக்கிசெம்பொன்மணிமகுடமின்ன
பேரிகைமுழக்கத்தோடுபெருமையாயேகுவாரே.

பொதிகைக்குவருகிற - தரு - ரா - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

மாமுனிதனைச் சேவிக்கப்பொதிகை நாடி
மன்னர்வழிநடந்தார்.

அநுபல்லவி.

கோமுடனேகையினுமவேலேந்தியே
நெறிமுறைதவறாதவராநடிமறவாத (மாமுனி)

சரணங்கள்.

வச்சிரப்பணிகள்மின்னவே தடப்புயத்தின்
வாகுவலயந் துன்னவே
உச்சிதக்கொடிபன்னவே முறைசமேள
மொங்கும் வாரதியென்னவே.
சித்ரக்குடைகவியத் தேவர்மலர்சொரிய
சிங்காரக்கணிகையர் சங்கீதங்கள்புரிய (மாமுனி)

பூவுலகமதிரவே மந்திரியானோர்
போற்றிநிதங் கூறவே
மேவிவேதியர் சேரவேயிருமருங்கும்
வேண்டுஞ்சேனைகள் நேரவே
காவலர்புகழ்பாட நாரியர்நடமாடக்
காவலர்புடைசூட கனகசாமரைபோட (மாமுனி)



வாசச்சந்தனச்சோலையுஞ் சிறப்புமேல்
வாய்ந்தபொதிகைமலையின்
சீஷர்பணிகள்செய்யவும் ஆறுமுகத்
தேசிகனருள்பெய்யவும்
ஈசனடிமலரையென்னாளு மறவாமற்
பூசனைகள்புரிந்துநேசமுடனிருக்கும். (மாமுனி)

அகஸ்தியமுனிவர் வருகிற விருத்தம்.

தாரணியாள்மன்னர்மூவர் தருவழிபொதிகைநோக்கி
வருகும்போதுயர்ந்ததெண்டிம்மறவுரிதரித்துப்பாத
குறடுதொடுத்துசீடர்கூடவம்மலையின்சாரல்
அரகரசம்போவென்று அகஸ்தியர்வருகின்றாரே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் சேரசோழபாண்டியர்கள் பொதிகைமலையைநோக்கிவருகும்போது சகலகலைகளுக்கும் வல்லவராகிய அகஸ்தியநாதர் வருகிற விதங்காண்க.

அகஸ்தியர் - வருகிற - தரு - ரா - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

திருஞானகஸ்தியர்வந்தார் தவஞ்செய்யுந்
திருஞானகஸ்தியர்வந்தார்.

அநுபல்லவி.

வருகாலமுதநான்கும் வழுவில்லாதுரைத்திடும்
வாரிதிபுனலொன்றாய்மதித்துக்கணத்திடும் (திருஞா)

சரணங்கள்.

காதிற்குண்டலங்கழுங்கையிற்செபமணியும்
ஆதியிறுதித்தகால்வேதபுத்தகங்கொண்டு (திருஞா)

சரணங்கள்.

தெல்லிசமண்டலமுஞ்சிரந்தமணிக்குடையுங்
கொண்டதுலவும்பொநிசையுண்டையிற்றவஞ்செய்ய (திரு)

பஞ்சாட்சரமணிந்துபாதகருமநிந்தொட்டு
யின்செயதுடையசிட்டர்தஞ்சந்தஞ்சமென்ன (திருஞா)

அரசர்கள் சொல் விருத்தம்.

மாமுனிநாதபோற்றிமதியருட்கடலேபோற்றி
காமனைக்கடிந்தாய்போற்றிகலையெலாமுணர்ந்தாய்போற்றி
தேமலர்சோலைசூழ்ந்ததேயத்திலமாரியில்லாப்
பாவமேயின்னதென்றுபரிந்தருள்புரிகுவீரே.

தருவு - ராகம் - காப்பி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

ஐயாமுனிநாத உங்கள்
அடியே யெங்கள் முடியே
வையகத்தையாண்டோ மன
மகிழ்ந்தோஞ் சிரசிருந்தோம்
களவு குலைபோய் வசனங்
கல்லோம் வேறு சொல்லோம்
பழிசேர் பஞ்சபாவ மேதும்
பண்ணோ மனதென்றும்
மாதமதில மூன்று மழை
வருமேயிரு திரமே
பூதலத்தின் மாரி யற்றுப்
போச்சே குறையாச்சே
வைதைதனிற புனல் சுனி
வருதே தாயற்றுதே
டையரவ செரக்க நடி
பண்பாத்தொழு கண்பா



குறையே நாள தென்று 17
குருநாதா ஞானபோதா
திருவாய்மலர்ந்தருள்வீ ரெங்கள்
தேவே முனிவர்கோவே.

அரசர்கள் சொல் விருத்தம்.

நிரைகடல்சூழ் துள்ளசெழும்புனரன்னையெல்லா
மொருகுலசத்துள்மொண்டவுயர்குருமுனியேபோற்றி
குறைவின்றியுள்ளதெல்லாங்கூர்ந்தெங்கள்மூவருக்குந்
தெரியவேயருளவேண்டுந்தேசிகாபோற்றிபோற்றி.

இதுமுதல் வேறு. தரு - ராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

திருவருள்புரிவாயே முனிநாதா திருவருள்புரிவாயே.

அநுபல்லவி.

திருவருள் புரிவாயே ரூபமு வுமடி
சிருபதமே யதித்தோ நிமதித்தோம் (திரு)

சரணங்கள்.

வேதமுறைப்படி நீதிதவறாமல்
பூதலத்தமை யாண்டோ மினிவேண்டோம் (திரு)

மூவருக்குதவி யவனுடனே மழை
யாயாதிருப்பதேனோ கந்தானே (திரு)

ஆயுங்கடாக்ஷபோரி மடிவிலெங்கும்
நிமதானில்லையே சுகமில்லையே (திரு)

எல்லா வுயிர்க்கும் லிக வல்லநடமிருவதைச்
சொல்லவும் போகாதே வழிநில்லாதே (திரு)

மாரிபொழியும் வகை தெரியச்சொல்லு மொழி
கூறும் பராபரனே தயாபரனே (திரு

அரசர்கள் வசனம்.

சரணஞ் சரணம் அகஸ்திய முனிவரே இதுநாள் வரையில் யாம் தங்கள் திருவடியினாலே யாதொரு குறைகளு மில்லாமல் பூலோகத்தை பரிபாலனஞ் செய்து வந்தோம். இப்போது எங்கள் மூன்று நாடுகளிலும் மாரியில்லாமல் சகல ஜீவப்பிராணிகளும் வருந்தப்படுகிறதைக் கண்களாற் பார்க்கக் கூடவில்லை. இது யேது குறைவுகளோவென்று அடியேன்களுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமையா ஸ்வாமி.

அகஸ்தியர் விருத்தம்.

காயசினவெய்யோன்சேயோன்முன்செலக்கதிர்கால்வெள்ளித்
தேசிகன்பின்புசென்றுநடக்குமிச்செயலால்முன்னீர
ஆசினையுலகிற்பன்னிருண்டுவான்கருங்குமென்று
பேசினாலவன்மாரிபெய்விப்போவென்றுகேண்மின்.

வசனம்.

கேளுங்கள் சேர சோழ பாண்டியர்களே இப்போது நவக்கிரக வக்கிரகங்களாகி சூரியன் செவ்வாய் முந்தியும் குருவுஞ் சுக்கிரனும் பிந்தியும் ராசிகளில் சஞ்சரிக்கிறபடியால் பன்னிரெண்டு வருடம் மாரியில்லையென்று வேதங்கள் கூறப்பட்டிருக்கின்றது. உங்களுக்கிப்போது மாரிபெய்ய வேண்டுமென்றால் மேகங்களுக் குடையவனாகிய தேவேந்திரனைப்போய்க் கேட்டுக்கொள்ளுங்கள் அரசர்களே.

அரசர்கள் விருத்தம்.

அன்னலாருளையிருக்கவருந்தவமுனிவரேநே
டன்னுலகத்திலவாழுமானிடருமேறாத
வின்னுலகத்துக்கேகித்தேவேந்திரனிடத்தில்
கன்னுவதெவ்வாறெங்கள்நாதனேயுரைசெய்வீரே.



வசனம்.

சரணஞ் சரணம் முனிநாதரே இந்தப்பூலோகத்தில் வசிக்கின்ற மானிடருமியாங்கள் தெய்வலோகத்துக்கு யெவ்வாறு சென்று தேவேந்திரனைக் காணப்படுவது அடியேன்களுக்குத் திருவுளமருள் செய்யவேண்டுங்களைய சுவாமி.

அகஸ்திய முனிவர் சொல் விருத்தம்.

உத்தமவானோர்தம்முளுத்தமர்குமீசன்
உத்தமசக்திமாளுத்தமியுத்திருணி
உத்தமவிரதத்தம்முளுத்தமத்திங்களேறன்பு
உத்தமமறைநூலாதியுரைக்கும்சோமவாரம்.

வசனம்.

வாருங்கள் சேரசோழபாண்டிய அரசர்க்கோதே வர்களுக்கெல்லாம் உத்தமதேவன் சிவபெருமான் சக்திகளுக்கெல்லாம் உத்தமசக்தி பார்வதியம்மன் விரதங்களுக்கெல்லாம் உத்தமவிரதம் சோமவாரவிரதம் நீங்களந்த விரதத்தை அநுஷ்டித்து வந்தால் தெய்வலோகத்துக்கு வழிதெரிந்து போகலாம் பிள்ளாயரசர்களே.

அரசர்கள் விருத்தம்.

அத்திருச்சோமவாரமான்மியவிரதந்தன்னை
பத்திசெய்திருக்கும்வண்மைப்பரிவுடனெங்களுக்கு
முத்தமேமுனிவர்க்கெல்லாமுதல்வனேமுறைமையதாகச்
சித்தமோமகிழ்ந்துநன்றாய்த்திருவருள்புரிகுவீரே.

வசனம்.

சரணஞ்சரணம் அகஸ்தியநாதரே அந்தப் பெருமை பொருந்திய சோமவார விரதத்தை அநுஷ்டித்து வருகிற முறைமையை அடியேன்களுக்குக் கட்டளையிட வேண்டுங்களையா சுவாமி.

அகஸ்தியர் விருத்தம்.

நிலாவரசியற்றுந்திரரேவிருட்சகத்தின்
மாதத்தில்பூர்வபட்சம்வருமாதிவாரக்கன்னில்
நீதமாயோர்போதுண்டிருந்திரைமருவுனிக்கிப்
பாதிமாதமதியோன்பாதம்பணிந்துபாரணைசெய்வீரே.

அகஸ்திய முனிவர் - தரு - ராகம் - புன்னாகவராளி - ரூபகம்.

கண்ணிகள்.

சேரசோழபாண்டியரேசோமவாரவிரதம்
சொல்லுகிறேனேநீருமவகையல்லமையாய்க்கேளீர்
வானகண்டுற்றபொருகார்த்திகையெனமாதம்
கதிர்வாரமுப்பூர்வபட்சங்கலந்துவருநாளில
ஒருபோதுண்ணியுணவின்றிவோதுநித்தியபால்கள
வுண்ணையுடன்கேள்வியுறுமொருமனதாய்மனதாய்
மனைவியொடிருவிருபோமலர்சந்தனவில்வம்
மல்லிமுல்லைகொன்றைதும்பைவில்வமிகவெடுத்து
சந்தனாதியப்பணிந்துவெருந்தமுதாகத்
தொலையுமல்லிமுள்ளசிவன்றெண்டர்களையழைத்து
தேடும்பொருடனிலேயாகஞ்செய்துகுலகுருவைத்
தெட்டபொனிடமனைவியுடனதிருவடிபைத்தொழுது
இரவுபகற்றுஞ்சாமலேயிருந்துசெவ்வாய்தனிலே
விண்பமுடன்பாரணைசெய்திருப்பீரரசர்களே.

வசனம்.

கேளுங்கள் சேரசோழ பாண்டியர்களே சோமவார விரதம் அனுஷ்டிக்கும் வருந்தமுறையானது கார்த்திகைமாதம் பூர்வபட்சத்தில ஆதிவாரநாளப் பகலில் ஒருபோது சாப்பிட்டு சோமவாரநாளையில் மனைவியோடு நல்ல தீர்த்தத்திலே ஸ்தானஞ்செய்து மல்லிமுல்லை கொன்றை வில்வமுதலியநாம் மெடுத்து சிவலிங்கத்தைப்பூசித்து வந்து சிவனடியார்களுக்கும் பிராமணர்களுக்



குந்தானங்கொடுத்து சோமவாரம் இரவும் பகலும் நித்திரையில் லாமல் புராணங்களைக் கேள்வியுற்று மூன்றுநாள் சுற்றத்தா ரோடு பாரணை செய்துவந்தால் தெய்வலோகம் போகலாம். இச் சோமவார விரதத்தை சுப்பிரமணியக்கடவுள் கார்த்திகைப் பெ ண்கள் நால்வருக்குஞ் சொல்ல அப்பெண்கள் அனுஷ்டித்து வ ந்து முத்திபெற்றபடியால் கார்த்திகைமாதமே விசேஷமானபடி யால் நீங்கள் பக்தியோடு அனுஷ்டித்து வாருங்கள் அரசர்களே.

அப்படியே அனுஷ்டித்து வருகுறோமைய்யா சுவாமி முனிநாதரே.

பொது விருத்தம்.

மாமுனிகூறக்கேட்டுமன்னர்கண்மூவருமேபெருந்
தாமவரிருக்கைசேர்ந்துதானியோர்க்கிங்கனைசெய்து
சோமவாரந்துதேறும்புதனுமன்முறைகள்நன்றே
நாமகோட்பாண்டியமன்னவன்நல்லகேயாடுகாந்திமதியே.

வசனம்.

இப்படிக்கொரும் அரசர்கள் மூவரும் அகஸ்திய முனிவரிட த்திலே விடைபெற்றுவந்து உக்கிரகுமார பாண்டியராஜன் சோம வாரவிரதமுறையை மனைவியாகிய காந்திமதிக்குச் சொல்லும் விதங்காண்க.

உக்கிரகுமாரபாண்டியன் விருத்தம்.

கன்னியேயுலகத்துக்காந்திமதியேகேளாய்
புன்னிதப்பொதியைமேவுமகஸ்தியமுனிநாதன்
சொன்னதோர்சோமவாரக்கடன்முறைகடன்னை
கண்ணாமகச்சொல்லுவேனதையேகேட்பாய்தானே.

தரு - ராகம் - ஆனந்தபைரவி - ரூபகதாளம்.

கண்ணிகள்.

கற்றிலுயர்க்க காந்திமதியே தமிழ்முனிவன் சொன்ன
காரியத்தினைக் கூறுவேன் கேளாய்

சொற்பெருஞ்சோமவாரமானதைத்துடங்குமுறையை
சுத்தமானவென்பத்தினிகேளாய்

ஆதிவாரகாலேளார்போதுண்டுமேயிரவும்பகலு
மயலிடங்களிற்செல்லிடாமலே

காலைமருகாட்கைகையாடியேசந்தநவனத்தலில்
கந்தமல்லிகைமந்தாரமுல்லை

விந்தையாயசெண்பகதுருக்கம்புன்னைமருகு
வில்வமோடியர்நல்லமலர்கொய்து

விசனுர்பத்பூசைசெய்தபின்பரங்கடமக்கு
மின்பமோடமன்புடன்செய்து

சோமவாரநாளிரவொருபகலுந்துயிலாதிருந்து
துய்த்திடவென்றாரெமெய்த்தவமுனிவர்.

பாண்டியன் விருத்தம்.

பத்தினிமிருட்சத்திங்கள்பரிதியின்வாரமின்று
சுத்தமாய்சோமவாரத்துலங்கவேவருதுநாளறச்
சித்திரமாடகூடதிருவாலையத்தல்லையெல்லா
மெத்தவேயணிதருசெய்துவிரதமுற்றிருப்போம்பெண்ணே.

வசனம்.

மாதும்பெண்ணே பிருணாயகி காது வரிப்படுக்கடவுளாகி ய சோமசுந்தரற்குரிய சோமவாரமென்னை யதுஷ்டித்து வந்தாலருமையாத மகிமையும் சந்தான விர்த்தியுஞ் சகலசம்பதமுங் கிடைக்குமென்று அகஸ்திய முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தைமார்தரும்பூர்வபட்சமுமாயது வாரமும் இன்றைக்கிலாந்தபடியால விரதமுற்றிருப்போம பெண்ணே யென்பிருணாயகி.

காந்திமதி வசனம்.

அப்படியே மகா பாக்கியமையா சுவமி.



பொது விருத்தம்.

அரசனுந்தேவிதானுமாதிவாரத்துநாளில்
நிறைபுனலாடிநல்லநேமமாய்ப்பலிகள்பூண்டு
ஒருபொழுதுணவின்றுவுமைமையும்மரனையுள்கி
விரதமுற்றிருந்துவேதவிதிமுறையாற்றுவரே.

தரு - ராகம் - காப்பி - அடதாளம்.

கண்ணிகள்.

பத்தினியாருடன்பாண்டியமன்னனுமெழுந்தான் முகற்
பானுவாரத்தன்னிலோர்போதருந்தியேயிருந்தார்

சுத்தமானசோமவாரத்தனில்பொய்கைசென்றார் நல்ல
சுந்திரநீராடினார்தாவனமேகினார்

மாசில்லாப்புன்னைமருகுசெவ்வந்தியைப்பறித்தார் கோக்கு
மல்லிகைமுல்லையிருவாச்சிசெண்பகம்நிறைத்தார்

அருகுகொன்றைவில்வமறுநாமலர்களையெடுத்தார் மேலத
வந்தனார்குங்குமத்திருநந்தாகமேயாமடித்தார்

சந்தனபுஷ்பமலைவைத்துதூபங்கள்கொடுத்தார் சொக்கர்
சன்னிதானந்தில்நிற்பக்திதுதிசெய்யதொடுத்தார்.

பாண்டியன் அகவல்.

அரகரசம்போ வாதியேசரணம்
திரிபுரமெரித்த தேவதேசரணம்
நகம யொணிக்க நாதநேசரணம்
பதியெனக்கவிலைப் பரமேசரணம்
சுந்தரமூர்த்தித் யுகநேசரணம்
கத்தனைப்பிரிந்றமுக் கண்ணரேசரணம்
விடமதையுண்ட வித்தகாசரணம்

அடியார்க்கிரங்கு மன்னவேசரணம்
அண்டர்கள்போற்று மமலனேசரணம்
சண்டனைபுரந்த தற்பரனேசரணம்
சம்பாபரனே சங்கரனேசரணம்
முப்புரமெரித்த முதல்வனேசரணம்
பன்னிருகைசேர்த பவமெலாமகற்றி
யின்றெனைப்பாது மீசனேசரணம்.

பாண்டியன் - தரு - ரா - காதகராமபிருகை - அடதாளம்.

பின்முடிக்கு கண்ணிகள்.

ஆதியேபாண்டிசோழியே சிவனிவர்
அம்பலத்திலிம்பர் போற்றிட
வம்பிலைகடுப நிம்போடாடிய (வாதி)
காமனைக்கண்ணிபாலெரியம்மைத் தொழக்
காலனுதைத்து வேளைவக்கொரு
தாழிசைமுடியே யாமுணமையதே (ஆதி)

தந்தைக்கொன்ற வந்தனன்பாவத்தை
சற்றுமுன்வழி யற்றமைவிட்
குற்றமெண்பாதை யற்றமேபோகுமே (ஆதி)

சோமன்கன்றையாவா பரனே
சத்தியோதியா பதிசெய்நகன்
கீர்த்திகேபர முத்திதந்திடும் (ஆதி)

வரிவழிமேய்கள் மரமேலிக்காந்தகார
வாதநூரைக கோதுநாதரே
நீக்கற்றியே பாதபருளசெயும் (ஆதி)

பல்கிளைமுன்னேபாரு செல்வத்தில்
வாசமலமெந் த்தீயுகேடகம்
பூசைசெய்தலின் பாசமகலருள் (ஆதி).



கல்லசெண்பகம்வில்வங் கொன்றைபுன்னை 20
காவதும்பையோ டருகசோகிகள்
விரியமலர்களாற் புரிவேன்பூசனை (ஆதி)

பாவியான்செய்த தீவினைபோகக்கண்
பாருங்கலிலையைத் திருமுனதரு
டாருமடியேனைக் கருங்கருணையால் (ஆதி)

பாண்டியன் விருத்தம்.

வேதநன்னெறியரிந்துவிழும்புமென்னமைச்சேகேளாய்
நீதிலாச்சோமவாரந்திருவிரதக்கைப்பூண்டு
நாதன்சொக்கேசர்பாதம்நன்றுடன்றுதித்துவந்தோர
மாதலாலவ்விப்பாரத்தையமைத்திடுமறந்தெசய்யோமே.

வசனம்.

வாரும்பிள்ளாய் மந்திரி சேற்றையதினம் ஆதிவாரம் பகலில் ஒர்போது போசித்து அந்தகாரணத்தை சுத்தியாயிருந்து பின்றைய தினஞ் சோமவாரத்தில் நிர்த்தமாக வழிபடுஞ்சடவுளாகிய சொக்கநாதர் மீருட்சிபாதங்களை ஸ்தோத்திரஞ் செய்து வந்தோம் பிலிமேல் அகஸ்திய முனிவர் சொல்லிய முறையாக பிராமணர்களுக்குஞ் சிவனடியார்களுக்கும் தானங்கொடுக்கவேண்டும் அவர்களெல்லாம் வரும்படியாக சாம்புவனையழைத்து பேரிகையடிக்கச் சொல்லும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி சொல் வசனம்.

அப்படியே மகாராஜ்யமையா சுவாமி.

சாம்புவன் வருகிற விருத்தம்.

சங்கரற்குரியதானசோமவாரத்துத்தானம்
விங்கைசேருலகிலுள்ளவேதியர்பரங்கள்காண
துந்துமியடிக்கவலவுந்துரிதமாய்க்கச்சைகட்டி
வந்தபேரிசர்சாம்புவன்வாகுடன்றோன்றினானே.

தரு - ராக - சங்கராபரணம் - அடதாளம்.

பல்லவி.

சாம்புவன்வந்தானே வீரச்சாம்புவன்வந்தானே.

அனுபல்லவி.

சாம்புவன்வந்தானேவெம்பணிமாப்பன்முன்
நேமியேயெளியுடன்விம்புகள்பேசியே (சாம்பு)

சரணங்கள்.

உச்சிக்கொண்டையுமிடைக்கச்சையிருக்கிக்கட்டி
யிச்சையாய்பேரிகையெசரித்தடித்திடும் (சாம்பு)

சாத்திரமுறைகளைவெந்தமையாகவே
யாத்திடியெபெருங்குளமாத்துகள்பேசியே (சாம்பு)

சாதியிலரியவன்னீதியிற்பெரியவன்
ஓதிகேகலைவோதருமாதியிலுதித்தவன் (சாம்பு)

ஏற்றவுமடிக்கடி போற்றவுங்களருண்ட
காற்றமும்பேரிகைசாற்றவுந்திரமிகும் (சாம்பு)

மந்திரிசொல் வசனம்.

கேளும்பிள்ளாய் வீரசாம்புவனே நம்மவுக்கிரகுமாரபாண்டிய மகாராஜா தெய்வலோகஞ் சென்று தேவேந்திரனைக் கண்டு மபொருட்டாக சோமவாரவிரதமிருந்து தானஞ் செய்கிறபடியால் உலகத்திலுண்டான சிவஅடியார்களெல்லாம் வரும்படியாக பேரிகை சாற்றிவாரும்பிள்ளாய் வீரச்சாம்புவனே.

சாம்புவன் வசனம்.

அப்படியேமகாபாக்கியமென்றேன்.



பேரியடிக்கிற கொண்டிச்சிந்து.

தனனதனதனனதனனதனனதனனதனனதனனே.

பேரிகைதாகடித்தான்சோமவாரப்பெருமையுள்ள
விருதமுறைபடித்தான் (பேரி)

வாரியின்முளக்கோலிபோற்றிசையெங்கு
மதிரவேயடியார்கள்செவியுறவே (பேரி)

சிவஸ்தலமுதலாகவசிக்கின்ற
சித்தர்களேஞானபரிசுத்தர்களேகேளீர் (பேரி)

பவமெல்லாந்தானகற்றுஞ்சோமவாரப்
பத்தியைபனுசரித்துவெற்றியுடனே (பேரி)

உக்ரகுமாரமன்னன்தானதர்மம்
முண்மையுடன்செய்கிறார்கன்மைபொலவே (பேரி)

தக்கபடியானதெல்லாங்கேளுங்கள்
தந்திடுவார்குறைவில்லைவந்திடுவீரே. (பேரி)

பரதேசிகள் வருகிற விருத்தம்.

உக்ரகுமாரபாண்டியனுயர்வுடன்சோமவாரப்
பக்துவமானதானப்பறையறைகேட்டபோது
திக்குத்தெங்குமுள்ளசிவயோகபண்டாரங்கள்
அக்கரையாகக்கூடியரசன்பால்வருகின்றாரே.

பரதேசிகள்வருகிற - தரு - ராகம் - தோடி - அடதாளம்.

கண்ணிகள்.

பத்தியுடன்சிவசித்திமுக்திபெரும்பண்டாரங்களுந்தோன்றினார்
வித்தகசொக்கர்மீனாக்ஷிபதங்களை
வேண்டித்துதித்துக்கொண்டாடிக்கொண்டு (பத்)

வசனம்.

கேளாய் பெண்ணே காந்திமதியே நாமள் சிவபெருமானுடைய சோமவார விரதமநுஷ்டித்து வந்த மகத்துவத்தினால் தெய்வலோகத்துக்குப்போகிற மார்க்கந் தேர்ந்திறபடியால் யானுஞ் சேரன் சோழனும் சென்று தேவேந்திரனைக் கண்டு வருகிறோம் வுன்தாதிமார்களுடனே அரண்மனையில் வீற்றிரும் பெண்ணே காந்திமதியே.

காந்திமதிசொல் விருத்தம்.

சின்னதோர்வயதிலென்னைத்திருமணஞ்செய்தின்னாளாய்
மன்னவாவுனைவிட்டுவகையுடன்பிரிந்ததில்லை
கன்னல்வின்மதநாசற்றுக்காணதுசகிக்கமாட்டேன்
என்னையுமழைத்துவிண்ணுடேகுவீரேகுவீரே.

வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி யென்பிராணநாயகா தேவரீரடியாளைப் பாணிக்கிரகணஞ் செய்த நாள்முதலிது வரையிலும் நிமிஷநேரமாகிலும் பிரிந்திருந்ததில்லை. ஆகையால் அடியாளையுங் கூட அழைத்துப்போக வேண்டுங்களையா சுவாமி.

தரு - ரா - கமாஸ் - ஆதிதாளம்.

பா வானுலகம்போய்வாரேன்மங்கைகாந்திமதியே
வானுலகம்போய்தேவர்பதிதன்னைக்கண்டுக்
கானமயிலேவாரேன்கடுகவிடைதருவாய் வாறு

கா மன்னுயான்தனித்திருக்கமாட்டேனடியாள்வாரேன்
சின்னவயதிலென்னைத்திருமணஞ்செய்தநாளாய்
கன்னல்மதனுமுசங்காணுதிருந்ததில்லை மன்று

பா மன்னுநாட்டரிவையர்கள்விண்ணாட்டுக்கேகலாமோ
பெண்ணணங்காளேயந்தன்கண்ணேமயங்கவேண்டாம் வாறு



கா செப்புமலரணையிலொப்பியொருமனதாய்
கைப்பிடித்தநாண்முதல்தப்பாதுவாழ்ந்திருந்தோம் மன்று

பா உத்தமியானமாதேசித்திரமாடமீதே
தத்தைமொழியாருடன்சொஸ்தமுடனிருப்பாய் வாறு

கா நாடும்தன்கணையால்வாடியிருக்கமாட்டேன்
கூடவருவேனெந்தநாடவனேயிப்போது மன்று

பா கட்டழகானபெண்ணேமட்டவிள்மலர்க்கண்ணே
அட்டிசொல்லாதேயின்னேதிட்டமாகவேசொன்னேன் வாறு

கா உன்னைப்பிரிந்திருக்கவொவ்வுமோயென்மனது
பொன்னுலகந்தனக்குமன்னவாகூடவாரேன் மன்று

பா காமரசக்கனியேநேமமுடனேநீயே
போமெனவருள்வாயேதாமதஞ்செய்திடாதே வாறு

கா வையகமாளுமன்னர்தையலரைப்பிரிந்துப்
பையவிருந்ததுண்டோமையல்தனக்கிசைந்த மன்று

பா மாரிபெய்யுமிசநேரமதில்வருவேன்
பாரியேமறுக்காமல்கூறுவாயொருமொழி ! வாறு

காந்திமதி சொச்சம்.

அன்னையாருடனே செல்வமாகவே காதல்தந்த
மன்னவனேயுன்றன் மனதின்படியாக
வன்கமுகு... ம்பைமாதர் மாமல் சொன்னாற்
பொன்னுலகஞ்சென்றுபோய்வருமென்னாதனே.

வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி யென் பிராணநாயகா தேவரீர் மனதின்படியே தெய்வலோகஞ் சென்று தேவேந்திரனைக் கண்டு மகிமையாய் பெற்ற சம்பாஷணைகளை சவுக்கியமாக ஆகிமம் வந்து சேருங்களையா சுவாமி.

பாண்டியன் சொல் வசனம்.

அப்படியேபோய்வருகிறேன் பெண்ணேபொன்பிறுணாயகி.

பொது விருத்தம்.

மனைவிபால்விடைகள்பெற்றுமன்னனுக்கரகுமாரன்
கனமிருஞ்சேரசோளன்காவலருடனேகூடி
தொனிபலமுழங்கவேதான்சுந்தரப்பணியணிந்து
மனமகிழ்வுடனேயிந்திரன்வாழ்நகற்சேருவாரே.

சேரசோள பாண்டியர் தெய்வலோகம் போகிற
தரு - ராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

அமருபதிநகரந்தேடி புவியரசர்கள்மூவருங்கூடி
சிவசோமவாசாலத்தரசேலயிந்திரதேவனைநாடிபோயின்மேலே
வாருவலின்தேரிலேறிக்ககனமிசைகளிலோத்தமுடிதுலங்க
வேகமுடனேவழிநடந்தார்வெருவிக்கைகயைகண்டுமனமகிழ்ந்தார்
காலகண்டநாசோமவாசந்தந்தகாஷியிதென்றுமனந்தேர
மேனதானதுந்திமிமுழங்கப்பெருமைதனியெங்கும்புகள்விளங்க
மாதிமாராயிரகூடவெற்றிமகரக்கொடிகளுயருடைச
சந்திரவட்டக்குடைபாவித்தேவர்தம்மலர்மாரியெங்குந்தூவ [ர்.
ஐந்துதருக்கள்தனைக்கண்டார்மனதானந்தமிகுதியாய்க்கொண்டா

தேவேந்திரன் வருகிற விருத்தம்.

சுரபதிமுன்னூபெரும்நாககோட்டணிமையநோக்கி
வருகுமபோகந்திரதேவன்வாணவரேகவல்பெய்யா
அருமிசிந்திராணிமேவவரம்பையர்நடனமாடத்
தருமனாதனந்திற்றுன்னொடுவாதிநாளே.

இந்திரன் வருகிற தரு - ராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

தேவர்க்கதிபதியாந் தேவேந்திரனுயர்ந்த
சிம்மாசனத்திலிருந்தானே.



அனுபல்லவி.

பூவலர்மாரியெங்கும்பொழியகந்தருவர்கிம்
புருடர்வித்தியாதரர்கள்புகழ்ந்துசங்கீதம்பாட (தேவ)

சரணங்கள்.

சுந்தரரம்பைதிலோத்தமைமேனகையூர்ப்பசி
சுரதசாயூக்கியம்பாடித்தொக்தோமெனநடிக்க (தேவ)

சந்திரசூரியருஞ்சகலதேவர்முனிவர்
சரணம்பணிந்துதாளத்தருமலற்பொடிவிழ (தேவ)

காமதேநேவல்கேட்டுக்களிப்புடனேநடக்க
கனமுடையநாரதர்கண்டமொழியுரைக்க (தேவ)

சேரசோளர் யிந்திரனுக்கு சொல் விருத்தம்.

தேவர்கள்முனிவர்போற்றச்செங்கையிற்குலிசமேந்தி
பூவலர்தருவிகீழற்பொருந்தியகோவேபோற்றி
மூவர்கள்நாடுதன்னில்மூன்றுபொழியாதாலே
ஆவலாய்த்தேடிவந்தோமருளதுபுரிகுவீரே.

தரு - ரா - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

தேவதேவேந்திரனே யெங்கள்சிந்தைதளர்ந்திடம்
வந்தமுறையைக்கேளும் (தேவ)

அநுபல்லவி.

பூவுலகத்திலேமாரி பொழியாமலப்பாலேமாரிப்
போனதுவருணையுண் டானதுமிகுதுயர்
காணுதுவாதைகள் தோணுதுயென்னசெய்வோம் (தேவ)

சரணங்கள்.

முடிமன்னரெல்லாரு         சுகமில்லாமற்
குறைமிகுந்தாசியல்         கலைமிகுபதவிகள்
அழிமிகுந்தாரனவர்கள்     மெலிமிகுமென்னசெய்வோம்     (தேவ)

பூங்காவனங்களெல்லாம்         கதிரவனாற்
பொரிமிகுவிருக்ஷங்கள்         முரிமிகுதகனல்கள்பட்
டெரிமிகுசகலமும்     குறைமிகுமென்னசெய்வோம்     (தேவ)

பண்ணைப்பயிர்களெல்லாஞ்         சிரிதுஞ்சலப்
பாச்சலில்லாமலே         காச்சலுடனேகெட்டுப்
போச்சுதுஅல்லசலும்     டாச்சுதுமென்னசெய்வோம்     (தே)

எங்களரசுகளிலே         யிவ்விதமான
விடருகள்சிறிதுகூறக்         கூடாவுமிலையிவ்
வுலகவெங்காங்கிலும்         படியினிலீதுவரை     (தேவ)

அரசர்கள் வசனம்.

கேளுங்களையா சுவாமி தேவேந்திர மகாராஜனே தங்கள் கிருபையினாலே யிதுகாள் வரையிலும் யாதொரு குறைவுகளில் லாமல் யாதுபூமியாகி மெய்துசகல விளைவுகளுஞ் செவ்வையாய்ப் பலித்து அதிலொரு கடமைபெற்று ராஜ்யியம் பரிபாலித்து வந் தோம யெங்கள் பூமியதாகினியும் மாரியில்லாமல் சகல பிரா ணிகளும் அன்னபானமில்லாமல் தங்களைத் தேடிவந்தோம் தே வரீர் கிருபைசெய்து மழை வருவிக்கவேணுமையா சுவாமி.

தேவேந்திரன் சொல் விருத்தம்.

வேற்றிமிகுமன்னர்காள் நம்மேவுங்க தேயிங்கிருப்பீர்
பொற்றரசுவட்டமதிற் சேருகைக்கின்மாரி
கூறவிட்டசெய்கைவிக்கவேயாருந்திமோதனத்திற்
சும்மாயிருங்கள்சுகமாயிருக்கதானே.



11609

வசனம்.

வாருங்கள் பூலோகத்தரசர்களே நீங்கள் கோபியாதேயும் மா ரிவருஷிக்கச் செய்கிறேன் யிதோவுங்களுக்குத் தனித்தனியாக சி ம்மாதனங் கொடுத்தேன் அதில் வீற்றிருங்கள் அரசர்களே.

பொது விருத்தம்.

இட்டதோருதனத்திலிருந்திடாதேகித்தென்னன்
அட்டியில்லாதுமிந்திரனுதனத்தன்னிலேறி
யிட்டமாய்வீற்றிருக்கத்தேவர்கோனருக்காருமாறு
சட்டமாய்ச்சிங்களரசைசிமரானளாகூர்வாமே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சேரசோழ பாண்டியர்கள் மூவர்களுக்கும் தேவேந்திரன் தனித்தனி வீற்றிருக்கச் சிம்மாதனங்கொடுத்து வீ ற்றிருக்கும்படி செய்ய மதுரை மன்னனான வுக்கிரகுமார பாண்டி யன் அந்தச் சிம்மாதனத்திலிருக்காமல் தேவேந்திரனிருக்கா நின் ற சிம்மாதனத்தில் சரியாகயிருக்கும்போது யிந்திரனோ பொ றுமைகொண்டு கிங்கிலியர்களை யழைத்துச் சொல்லுமிது விருத் தங்கள்.

தேவேந்திரன் சொல் விருத்தம்.

ஆடமிங்கரோரின்டருமையாயெகிக்கள்
கூறுதற்கரிதானதொருமணியாரக்கன்னா
கேருடன்கொண்டுவந்துநின்முடிசெவியமிம்பத்
தாரணிமார்புதன்னிற்றாக்கவேபோடுவீரே.

வசனம்.

வாருங்களென்னாய் கிங்கிலியர்களே பூலோகத்தில் மரக்க மது ரைபுரியை யாளாநின்ற வுக்கிரகுமார பாண்டியன் சக்கோளியு ம் பாயக ஒருபெரிய மணிகளையுடைய ஆரத்தைக் கொண்டுவந்து அவன் மார்பில் நீர்ப்ரிசினாய்க் கிங்கிலியர்களே.

கிங்கிலியர்சொல் வசனம்.

அப்படியே மகாபாக்கியம்மையா சுவாமி.

இந்திரன் சொல் விருத்தம்.

அழிவிலாக்கிங்கர்கொண்டுஅழித்ததோர்மணியாரத்தை
எழில்தெனமதித்துநின்றவிறைவனேவுனக்கிப்போது
தழர்விலாதென்னுளாரந்தாங்குபாண்டியனென்றேநி
வழிவழியுலகோரெல்லாமதித்திடப்பெயர்தந்தேனே.

வசனம்.

கேளும் உக்கிரகுமார பாண்டியராஜனே யாவருந் தாங்கவொணாத மணியிழைத்த ஆரத்தை நீ தளர்ச்சியில்லாமல் தாங்கி நின்றபடியால் பூலோகமுள்ளளவும் ஆரந்தாங்கு மாறனென்னு யாவரும்புகழத்தக்க நாமதேயங்கொடுத்தேன் நீங்கள் மூன்று பேரும் பூலோகஞ்சென்று ராசாதிபத்தியம் செய்து சுகமாக வாழ்ந்திருங்கள் அரசர்களே.

அரசர்கள் சொல் வசனம்.

அப்படியே போய்வருகிறோம் தேவேந்திரமகாராஜனே.

பொது விருத்தம்.

வானுலகினிந்துமன்னர்வருகுமுன்னிந்திரதேவன்
றானுமேயேவமங்குல்களைத்திருநாடுபெய்ய
மீனவநாடுமுன்போல்வெறுமையுற்றிருக்குமன்னோ
ஏனமும்புலியுமானுமெய்துமேவந்ததன்றே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தேவேந்திரன் சேர சோழபாண்டியர்களுக்கு விடைகொடுத்தனுப்ப அவர்கள் ஆகாயத்தைவிட்டு பூலோகத்திற்கு வருமுன்னமே யிந்திரதேவன் கட்டளைப்படி மேகங்களான



து சேரசோழர் நாடுகளில் பெய்து பாண்டியநாட்டின்கண் மாரியில்லாமல் வெறுமையாயிருப்பதை உக்கிரகுமார பாண்டியன் கண்டு தேவேந்திரன் செய்த வஞ்சகத்தை யோசித்திருக்கும்போது பொதிகையிலிருநின்ற மிருகங்களெல்லாம் மதுரை நகரத்துக்கு வருகிற விதங்காண்க.

மிருகங்கள் வருகிற தரு – ரா – சாவேரி – அடதாளம்.

பல்லவி.

மிருகமநேகம்வந்துதேபொதிகைவாழும்
மிருகமநேகம்வந்துதே.

அநுபல்லவி.

பெருகுந்தண்டலைவயல்மருங்கெங்குநிறைந்துள்ள
பருவபயிரழிக்கவொருமைபூண்டேகூடி (மிரு)

சரணங்கள்.

சிங்கம்புலிகரடிசென்னாயும்பெரும்புலி
துங்கமுடையநகரெங்குங்குதித்தெழுந்து (மிரு)

கிள்ளைகுயிலினங்கேகாயங்கடைகளும்
புள்ளினமுள்ளதெல்லாங்கொள்ளைகொள்ளையாய்கூடி (மிரு)

யிடமும்வலமுமாகவிசைந்துபாச்சலுடனே
திடமானபயிர்களைத்தின்றழித்திடநல்ல (மிரு)

கொல்லையின்மேய்ந்ததொருநல்லபசுக்கள்தன்னை
வல்லமையுடன்பிடித்தல்லல்படுத்துந்துஷ்டட (மிரு)

பொது விருத்தம்.

பாரியமிருகம்வந்துபயிரளித்திட்டசேதி
கூரவேபாண்டிமன்னன்கோப்பெளவெழுந்துவந்து
வீரமாய்வேட்டையாடும்வேடரையழைக்கும்போது
தீரமாய்கச்சைகட்டிதிரத்துடன்வருகின்றாரே.

வேட்டைக்காரர்கள் வருகிற - தரு - ரா - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

வேடுவர்வந்தாரே விற்விரவேடுவர்வந்தாரே.

அநுபல்லவி.

வேடுவர்வந்தாரேகூடியேபாண்டிய
நாடவன்முன்பினிலாடியேவலையுடன் (வேடு)

சரணங்கள்.

தாட்டியமொடுகையிலீட்டிவல்லையங்கொண்டு
ஆட்டியேதெந்தெனப்பாட்டுகள்பாடியே (வேடு)

சிங்கங்கள்போலவேபொங்கியெகுதித்துநல்
லிங்கிதமாகவேசங்கையில்லாமலே (வேடு)

பாயும்புலியினையபாயமுட்டன்பிடித்து
வாயைபிளந்துயிரைமாயச்செய்திடும்வன (வேடு)

கோபக்கனற்பொரிகண்டாவியுடல்நடுங்க
மேவிச்சபையடங்கக்கூவிக்குரலெழுப்பி (வேடு)

பொது விருத்தம்.

வேடுவர்வந்துகூடிவேட்டையின்பேரியெங்கும்
போடும்போதுக்ரமாரன்பூவையுங்காதிர்கேட்டு
நாடியேவந்துபிருணநாயகன்சமூகந்தன்னில்
வாடியேநின்றுகாந்திமதிமாதுவுரைசெய்வாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் விக்கரகுமாரபாண்டியன் பொதிகைக்கி வேட்டையாடப்போகிற பேரிகைசத்தம் மனைவியாகிய காந்திமதி கேள்விப்பட்டுத் தன்நாயகனிடத்தில் வந்து சொல்லுகிற விதங்காண்க.



காந்திமதிசொல் விருத்தம்.

மணம்புரிந்தென்னையாண்டமன்னவாபோற்றிபோற்றி
அணிதிருமதுரையாளுமம்பிகைபாலாபோற்றி
துணைவுடனின்அருவிற்சொற்பனப்பேதங்கண்டே
நணுகியேபொதிகைவேட்டையாடவும்போகொணாதே.

வசனம்.

அடியாள் சரணஞ் சரணம் மென்பிராணநாயகா யின்றுமுந்திரியில் யான் சயனித்திருக்கும்போது பொல்லாத சொற்பனங்கண்டேன் ஆனதால் பொதிகைக்கி வேட்டையாடப்போகிறது அடியாளுக்கு விதனமாயிருக்கிறதையா சுவாமி.

தரு - ராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பாண்டியனுக்கும் காந்திமதிக்கும் சமவாதம்.

பா இரதியீரைதப்பளித்துவருவையேபொதிகையிலேகி அரி
யேனம்புலிகரடிமானுமயில்கள்முத
லானமிருகவேட்டையாடிவருவேனடி.

கா நாயகாயின்றிரவிலமாயமாவொருகனாநானே கண்டேன்
நாடியேவேட்டைகளாடவேபோகவுங்
கூடாதுயிப்பொழுதுநாதாபிருணபோதா

பா அரசருலசதலைவருரைசாயாய்காரப்பதிருலே யிப்போ
தட்டிசொல்லாமல்வழிவிட்டுவிடுவாயெந்தன்
கட்டளகானமயிலாளேவொயில்லானே

கா சித்திரக்கெழுதொணுவிஸ்த்தாரவடிவானதேகா காணஞ்
சென்றுவேட்டையாடும்போதென்னுமலருச்பனி
யொன்றுவாவுங்கண்டேன்திருவேறறிவிரு

பா அக்கரவணிந்திடுஞ்சொக்கநாதர்கிருபையாலே வேட்டை
யாடிமதுரைநகர்தேடிவருவேனெந்தன்
பேடையன்னமேகிடைதாருயிப்போநேருய்

கா மாற்றலர்பகளிகள் தார்றவுன்மீதுகண்டேன்மன்ற வேட்
மார்க்கமாய்ப்போவதும்யோர்க்காதுயின்றுபகல் [ண்ட
திர்க்கப்புகள்படைத்தவாசர்குணசேசா

பா ஆசைக்குயிலேசெகதிச்ருடையசோம்வாரம் கொண்ட
வனபிறைல்ப்பகைவர்செய்துன்பமனுகிடாது
யின்பமானயெந்தனுவிச ஞ்சிவி

கா யெத்தனையான்புகல்வேன்வெத்திமுடிபுனைந்தயிறைவா பக
சிருக்கவேசேனையுடன்பெருக்கமாய்நகர்வந்து
சிரககவேசேர்ந்திடுவீரேகுருசுகமாகும்.

காந்திமதி வசனம்.

சரணஞ்சரணம் பிராணநாயகா தேவரீர் மனதின்படியே பொதி கையிற்சென்று வேட்டையாடிக்கொண்டு சேனைபதாதிகளுடனே சுகமாக நம்நகரம் வந்து சேருங்களையா சுவாமி பிராணநாயகா.

பொது விருத்தம்.

பரிவுடன்மனைவிதன்பாற்பாண்டியன்விடைபெற்றுக்
கரிபரியிரதஞ்சூழகனத்தவில்லம்புமேந்தித்
திரமுடன்வேட்டையாடத்தென்பொதிகைமலையைநோக்கி
விரைவினிலைமைச்சரோடுவேந்தனும்புறப்பட்டானே.

வேட்டைக்குப் போகிற தரு — ரா — பியாகு — ரூபகதாளம்.

பல்லவி.

ராஜன்பாண்டியராஜன்பொதிகைநாடிபோறானே வேட்டை யாடப்போறானே.

அநுபல்லவி.

தேசமுடன்வனவேசங்கொண்டுகவசம்தொட்டு அணிமாட்டி
சொக்க சாடிகையைத்தொழுதுதனுவில்லம்பிசைபுடன்பூட்டி
மிகுவுசரித்தமேட்டி (ராஜ)



சரணங்கள்.

திடமுடன்கடலொலியெனப்பெருஞ்சேனைகள்கூட
முற சடிபடவெங்கும்வருசையாய்மத
வானைகள்நாடமாதர்வீணைகள்பாட (ராஜ)

மதகயமேரிக்குடைகள்கவியவானவர்புகள
சேனை பொதிகைவரைச்சாரெங்கும்நிறைந்து
பொங்கமொடுநிகளமதுரைத்துங்கள்மனமகிழ (ராஜ)

விந்தையுடன்மதிமந்திரிமாரெல்லாமேவியேநின்றிலங்க
வுயர் சந்தனம்புன்னைவிருக்ஷங்களெங்கெங்குந்தன்மையுடன்
றுலங்க யார்க்கும்நன்மனமுங்கலங்க

பொது விருத்தம்.

மதிமந்திரிமார்களோடுமதகஜந்தன்னிலேறி
யதிபதியானபாண்டியரசனும்நகரைநீங்கிப்
பொதிகைமாமலைச்சார்நண்ணிபுகள்பெருஞ்சேனைசூழக்
கதிருளிதோன்றுக்காந்தகனவேட்டையாடுவானே.

வேட்டையாடுகிற தரு — ரா — தன்யாசி — அடதாளம்.

பல்லவி.

வேட்டையாடினானேபாண்டிராஜன்வேட்டையாடினானே.

அநுபல்லவி.

வேட்டைகளாடினான்தாஸ்ட்டிகத்தொடுசைரி
வீட்டிவல்லயங்கொண்டுகாட்டைவளைந்துசுத்தி (வேட்)

சரணங்கள்.

பொங்கிக்குதித்துவருஞ்சிங்கம்புலிகரடி
யங்கமபிளந்துவிழப்பங்கப்படவேகுத்தி (வேட்)

கொம்புமல்லாரிபேரிபம்பைமுளக்கமோடு
வம்புசெய்மிருகத்தையம்புவேலாலேகுத்தி. (வேட்)

மானினத்தையடுத்துமயிலினத்தைப்பிடித்து
யேனினத்தையடித்துவிசையுங்கணைதொடுத்து. (வேட்)

பாண்டியன் விருத்தம்.

வஞ்சகமகலவோதுமந்திரிமாரேகேளீர்
வெஞ்சினமிருகவேட்டைவிளையாடிவந்தோமநாமள்
விஞ்சையர்க்கரசன்செய்தவினையினுவிவட்டமேயும்
மஞ்சினைப்பிணைத்துநம்மவளர்நகர்க்கேகுவோமே.

வசனம்.

அமைச்சாவாருங்கள் மந்திரிமார்களே இந்தப்பொதிகை மலையிலி ருக்கப்பட்ட துஷ்ட்ட மிருகங்களையெல்லாம் சம்ஹாரஞ்செய்து வந்தோம் இப்போது கபட்மார்க்கமாக சேரசோளர் நாடுகளுக் கு மாரிவருஷித்து நம்மநாட்டுக்கு மாரிபெய்யாமற் செய்த இந் திரனுடைய மேகங்கள் நான்கும் யிதோ பொதிகைமலையில்ச் ஞ்சரிக்கின்றது அதிகளைப்பிடித்து தளையிட்டு நம்ம மதுரைநகர த்துக்குக் கொண்டுபோய் சிறைச்சாலையிலடைத்து வைக்கலாம வாரும்பிள்ளாய் மந்திரிமார்களே.

மந்திரிமார் வசனம்.

அப்படியே தேவரீர் மனதின்படி தேவேந்திரன் மேகங்கள் நான்கையும் பிடித்து கொண்டுபோகலாம் வாருங்களையாசுவாமி.

பாண்டியன் தரு - ரா - கமாஸ் - அடதாளம்.

பல்லவி.

மந்திரிமார்களே இந்திரன்கார்களை வந்துவளைந்தடித்து
களையெடுத்து மிகத்தொடுத்து ஒன்றாய்
வாருங்கள் முறைசேருங்கள் கைகூடுங்கள் நன்றாய்சேருங்கள



சேனைத்தலைவரே மேகங்களுஞ் சென்றுவிரைந்தோடி
மிகநாடிப் புயல்தேடி. வட்டஞ்
சேர்க்கவும் நன்றாய்பார்க்கவுஞ் சத்தமார்க்கவு மிணைதாக்கவும்

சந்தனச்சோலையிற் கந்தரங்களெல்லாந் தப்பியேபோகுதடா
மேலோடுதடா விடாதிரடா கரந்
தட்டியே துடிகொட்டியே வலைகட்டியே ஓடிமெட்டியே

திக்கிருநான்கிலு மக்கினியம்பைச் செலுத்திவிரட்டுங்கடா
திரட்டுங்கடா உருட்டுங்கடா நகர்
சேருவோம் மனமாருவோம் பழிதீருவோம் சமர்நேருவோம்

வேட்டந்தனிற்பட்ட காட்டானைகளபோல விந்தையுடன்
பிடிப்போம் வழிநடப்போம் நகரடுப்போம் வெளி
மீட்டுவீர் சாம்பூட்டுவீர் வரைதாட்டுவீர் தழைந்தோட்டுவீர்

யிந்திரலோகஞ் செவிடுபடக்கடிந் தெக்காளபேரிகையை
தற்றூரிகையை மல்லாரிகயை விற
சேறுவீ றடிசாற்றுவீர் புகள்தூற்றுவீர் சிறையேற்றுவீர்

விருத்தம்.

வேட்டத்திற்பட்டசெங்கண்வேளம்போற்புயல்கடன்னைக்
கோட்டத்திலிட்டானுகக்குன்றிரகரிந்தவென்றி
நாட்டத்துப்படிவந்தண்டநாடன்மாற்றிதனைக்கேட்டு
காட்டத்துக்கனல்போற்சிரிகடுஞ்சமர்விளைத்துசெல்வான்.

வசனம்.

இந்தப்பிரகாரம் உக்கரகுமார பாண்டியராஜன் மேகங்கள் நான்கையும் தளையிட்டு சிறைச்சாலையிலடைத்த சேதியை தேவே ந்திரன் கேள்விப்பட்டு தேவப்படையோடு மதுரை நகரம் வந்து பாண்டியனைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

### இந்திரன் சொல் கந்தார்த்தம்.

பாண்டியப்பயலேசற்றும்பயங்கரமில்லாதே
யின்டெந்தன்கார்கடலினையிணைத்துடன்பிடித்துவந்தாய்
மாண்டிடவேண்டாமென்கைவச்சிரயுதத்தினாலே
வேண்டியேபணிந்துகாரை

விட்டிடுவாயே அல்லவிடிற் பட்டழிவாயே
விட்டிடுவாயிந்தமட்டிலேயான்சொன்னேன்
அட்டியில்லாமல்நீ கெட்டுப்போகுமுன்னே (விட்டி)

### இந்திரன் வசனம்.

அடாவாடா வுக்கிரகுமாரபாண்டியா நீ யென்னளவும் அச்சம் பயமில்லாமல் யென்மேகங்களைப் பிடித்துவந்து சிறைச்சாலையி லடைத்தாய் உன் ஜீவன்போகுமுன்னமே யென்னைப்பணிந்து கார்களை விட்டுவிடும் பிள்ளாய் பாண்டியனே.

### பாண்டியன் சொல் கந்தார்த்தம்.

நல்லதாயிந்திரனுன்னாகலோகத்துவாழ்வும்
வல்லமையுடையவச்சிரவாயுதத்திறமையெல்லா
மொல்லையிலறிவேன்சொக்கருதவியவனாயினாலே
யெல்லையிலின்றுடானும்.

பொய்யடாபார்ப்போம்பெருஞ்சமர்செய்யடாபார்ப்போம்
யெய்யடாவுன்மொழிபொய்யடாநீதப்பிக்
கய்யடாயான்சொன்னேன்மெய்யடாவோடாமல்.

### பாண்டியன் வசனம்.

கேளுமடா தேவேந்திரா நீ சேரசோழர் காட்டுக்கு மாறி வருஷித்து யென்னாட்டுக்கு வஞ்சகஞ்செய்தபடியால் வுன்மேகங்களை தளைந்து சிறையிட்டேன் வுன்னால் செளரியமுண்டானால் என்னோடே சமர்செய்து மேகங்களைமீட்டுக் கொண்டுபோடா தேவேந்திரா.



### தேவேந்திரனுக்கும் பாண்டியனுக்கும் சம்வாதம்.

தரு - ராகம் - சாவேரி - அடதாளம்.

இ வாருமடாவுக்கிரமாறாவுந்தனிட
வீரியமெல்லாநான்வெல்லுவேன்பாராய்

பா வெல்லுகிறேனென்றுவல்லமைசொன்னாலுந்
செல்லாதென்முன்னிந்திரதேவனேபோடா

இ போடவாடாவென்றுபொய்பிரட்டென்முன்னே
கூடாதுபாண்டியகொல்லுவன்பாராய்

பா பாருமென்கைவேலாற்பரவைவற்றலுண்டான
நீர்வற்றிப்போனதைநீயறியாயோ

இ அறிந்தேன்வச்சிரத்தாலேயானகுன்றுகளெல்லாம்
ஒருநிமிஷமட்டுமோடாயல்லவாடா

பா ஓடிவந்திந்திராவுன்பழியென்னிட
நாடுகிற்றீர்ந்ததுநானறியேனோ

இ அழப்பட்டுவிழுமுன்னே அடிபணிந்தென்காரைத்
திறந்துசிறைச்சாலையைத்திரம்விடுவாய்

பா விடுவிக்கவுன்னாலேவீரங்களுண்டானால்
கடுஞ்சமர்செய்துந்தன்கார்கொண்டுபோவாய்

இ கொண்டுபோகாவிட்டால்குலிசனலவென்னிடம்
உண்டானதேதுக்குவொருகணைபாராய்

பா ஒருகணைக்கொருகணைபுறுதியாய்விட்டுன்மேல்
மருகனைத்தொடுக்குறேன்வருகுதுபாராய்

இ தொடுத்தபகழிதன்னைத்துணிந்தப்பபடித்தியே
விடத்துடன்பத்தம்புசேர்த்துத்தொடுத்தேன்

பா. விட்டநார்க்கதைகுலம்வேகமாய்வருகுது
முட்டாதேயிந்திரமோசங்கள்வருமே

இ. வருதடாபாண்டியமார்புக்குநேராக
சரியானசத்திவேலதப்பிக்பிழைப்பாய்

பா. பிழைத்திடத்திரிலோகம்போனாலுமிந்திரா
வனைத்துன்னைக்கொல்லவேல்வருதொன்றுபாராய்

இ. ஒருவேலைக்கண்டித்துன்னுயிர்கொள்ளைகொள்ளவே
வருகுதடாவெயந்தன்கைவச்சிரவேல்தான்

பா. வச்சிரம்பொடிபட்டுன்வண்ணமுடிசிதற
இச்சிணம்வளைதனையெரிக்கேனான்பாராய்

பொது விருத்தம்.

வளையனுமுடிதகர்த்தவாருகண்டிந்திரதேவன்
தளைபட்டப்புரத்திலேயிக்கலங்கியேமனதுநொந்து
மழைதரச்செய்யாதாலேமதுரையாள்பாண்டிமன்னன்
பழிமுடித்திட்டானென்றுபதறியேபுலம்புவானே.

இந்திரன் தரு - ராகம் - காப்பி - அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனினியேதுசெய்வேனெனக்
கிவ்விதிநேர்ந்ததையோவானுலகினிலெவ்விதஞ்சேர்வேனையோ

வன்னமுடிபூண்டுவச்சிரப்பாணியாய்மகிழ்ச்சியுட
னிருந்தேனிப்போதார்க்குமிகட்சிபடப்பிறந்தேன்

தேவர்முனிவர்தினந்தினம்போற்றச்சிறக்கவரசாண்டேன்
இப்போதுநகைக்குமுறைபூண்டேன்

மண்ணுலகாளுமவிதன்மகுடம்வகிப்படச்செய்தானே
வெனதுநிட்டங்கொட்டவெய்தானே



ரம்பைதிலோத்தமையூர்வசிமேனகைகன்றுநகைப்பாரே
யிந்திரனியாள்சென்றுலந்திகைப்பாளே

வச்சிரவாளால்மலைச்சிறகெல்லாமறுபட்டக்கொய்தானே
மகுடங்குலையப்படச்செய்தானே

சோமவாரவிரதந்துடங்கியமதுரையார்க்கேகடித்
திட்டானேபுயல்களைச்சேர்த்தடைத்திட்டானே.

விருத்தம்.

காற்றினுமிகுதியானகடியதூதுவனேகேளாய்
மாற்றலர்தன்பாண்டிமன்னனுக்கருமையாகச்
சாற்றியதிருபந்தன்னைத்தந்துபின்னவனுரைக்கும்
மாற்றத்தையறிந்துயென்முன்வந்துதானுரைசெய்வாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் தூதுவனே யிப்போது வுக்கிரகுமாரபாண்டியனானவன் சொக்கநாதர் மீனாக்ஷி தேவியாருடைய குமாரனுமாயிந்த சோமவாரமான்மியம் பெற்றவனுமா யிருக்கின்றபடியால் ஒருநாளும் அவனை வெல்லத்தக்கதல்ல நமது மேகங்களை விடும்படியாக விசுவாசித்து திருபமெழுதித்தருகிறேன் அதை அவனிடத்திற் கொடுத்து மேகங்களை விடுவித்து வாரும்பிள்ளாய் தூதுவனே.

அப்படியேமகாபாக்கியமையாகவாரி.

தரு - ராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

தூதன்வந்தானேயிந்திரன்விடுந்தூதன்வந்தானே

அநுபல்லவி.

தூதன்வந்தானேபுகல்ந்தவிம்மனு
நீதிசேர்தென்னன்சிம்மாதனந்தேடியே ....... (தூத)

சரணங்கள்.

தடாகயின்வாசகமுடங்கலைப்பற்றியே
திடமனத்துடன்பெருகடையுங்கடினமான (தூத)

நீதியில்லாமல்நயமோதிப்பயில்கள்பேசி
வாதுசெய்மனத்தரைச்சாதுவுண்டாக்குநற் (தூத)

ஆண்டவனருள்நிதம்பூண்டுயிந்திரகமர்
மீண்டுவரசிருக்கும்பாண்டியன்கொலுவினில் (தூத)

தூதன் விருத்தம்.

மீனநற்கொடிபடைத்தவெற்றிசேர்பாண்டிமன்னா
வானநாடாழுகின்றவாசவன்தூதனுனே
ஆவதோரோலைதந்தாரதிலுறும்வாசகத்தைத்
தானுமேதெரிந்துகார்களதன்னையேவிடுகுவீரே.

வசனம்.

வாருமையா வுக்கரகுமார பாண்டியராஜனே யெங்கள் தேவேந்திரமகாராஜா தங்கள் சமுகத்துக்கு வாசகமெழுதிக்கொடுத்தார் நீங்கள் பார்வையிட்டு பதிலுத்தாரம் சொல்ல வேண்டுமையா பாண்டியராஜனே.

பாண்டியன்மந்திரிக்குசொல் வசனம்.

வாரும்பிள்ளாய் மந்திரி நம்மோடு போர்செய்யமாட்டாமல் புறமுதுகிட் டோடிப்போன தேவேந்திரன் யெழுதியனுப்பிய நிருபத்தை வாசித்து வாரும்பிள்ளாய் மந்திரி.

மந்திரி நிருபம் வாசித்தல்.

கந்தமிகுசுந்திரச்செந்தமிட்பாவலர்
கணபேணிகின்றதீரன்



கருணைமிகுசெழுங்கேசர்பாதமரவாதுநற்
காசூழிபெற்றிடுமுதாரன்

விந்தைமிகுசந்திரகுலாதிபன்கடல்சுவற
வேல்விட்டுவென்றவீரன்

விஞ்சைமிகுமதுரைவளருக்கரகுமாரமன்
மேவுசமுகந்தனக்கு

இந்திரன்முகமனுரைசெய்துசந்தோஷமா
யெழுதிவரவிட்டநிருபம்

யேதெனிலோநாமிருவர்பகியின்றிநேர்மையா
யென்றுமுகந்திருப்போம்

கந்தரம்நான்கினைச்சிறைதிறந்தேவிடுங்
கபடமில்லாமலுந்தன்

கன்னிநாடன்னிலேயென்றுமுநன்மழை
களிப்புறப்பெய்துவைப்பேன்

இந்தமொழிபிசகாமற்செக்கமெளவாய்த்தமக்
கேதுதடைசெய்திடாம

இனிதுடன்கார்கள்தனைவிடுகவென்றிந்திரன்
யெழுதுகையோலைதானே.

பாண்டியன் விருத்தம்.

வானவர்தூதாயிந்திரன்வசனமேபொய்த்துமுன்னாட்
போனதாலிப்போதிந்தபூபால்தனைவிடவுமாட்டேன்
மானதபுருடனாவலங்கென்னோடமர்புரிந்து
சேனுலகேகவென்றுசெப்புவாய்திரும்பத்தானே.

வசனம்.

வாரும்பிள்ளாய் தேவேந்திரன் தூதனே முன்னுள் சேரமோ

ளரசருடனே தெய்வலோகம் வந்தபோது அந்த தேவேந்திரன் கபடமார்க்கமாக சேரசோளர்க்கு மாரிகொடுத்து யெனக்கு கொடாமற்செய்த பொய்யன் வசனத்தை நம்பதக்கதல்ல மேகங்கள் வேண்டுமென்றால் யென்னோடு போர்செய்து மீட்டுக்கொண்டு போகச்சொல்லும்பிள்ளாய் தூதனே.

தூதன் யிந்திரனுக்கு சொல் விருத்தம்.

எங்களையாளும்விண்ணாட்டிறைவனேபோற்றிபோற்றி
உங்கள்சொற்படியேசென்றுவேலையைமதுரைமன்னன்
செங்கையிற்கொடுத்தேனத்தைத்தெளிவுறநோக்கிக்கோபம்
பொங்கியேகார்விடாமற்போற்செய்யவறவென்றனே.

வசனம்.

சரணஞ்சரணந் தேவேந்திரபதியே தேவரீர்கொடுத்த திருபத்தைக்கொண்டுபோய் வுக்கரகுமார பாண்டியன் கையிற்கொடுத்தேன் அதை வாசகஞ்செய்துபார்த்து தங்கள் வசனத்தை நம்பத்தக்கதல்லவென்று அவமதிப்பாய்க்கோபங்கொண்டு தன்னோடு வந்து போர்செய்து மேகங்களை மீட்டுக்கொண்டு போகலாமென்று சொன்னுரையாசுவாமி தேவேந்திரமகாராஜனே.

பொது விருத்தம்.

வேகமாய்த்தூதன்வந்துவிளம்பியமொழியைக்கேட்டுப்
பாகசாதநனுமெத்தப்பரதவித்திருக்கும்போது
வாருடனமுடிபுனைந்துமட்டிலலாப்பணிகள்பூண்டு
மேசம்போற்குடைகெடுக்கும்வேளாளகுலன்வந்தானே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் தூதன்வந்து பாண்டியன் சொன்னவசனத்தைச் சொன்னமாத்திரத்தில் தேவேந்திரன்கேட்டு கிலேசப்பட்டிருக்கும்போது அவனுக்கு விசுவாசியாகிய மதுரைப்பட்டணத்திலிருநின்ற வேளாளமன்னன் வருகிற விதங்காண்க.



தரு - ரா - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

காராளகுலசீலன்கங்கையருளும்பாலன் காமன்
கொலுவினில்வந்தான்.

அநுபல்லவி.

வீருநிவீரற்கும் வேந்தரனைவோர்க்கும்
விஸ்தாரகுணயோகன்உத்தமதனவாகன்
விளைவுபயிரிடுங்   களனிமிகவுள
அழகிலணியொடு   வளமுமகிழவே   (காரு)

சரணங்கள்.

சரிகைப்பாகைதுலங்க   சற்சனர்புடைகூட
சந்தமுடனேவாணர்   தமிழாற்கவிகள்பாட
தக்கசேகள்விகள்   யிக்கநாடிய
பக்கல்மனிதர்கள்   கெக்கலிப்புற   (காரு)

அமருபதிநகரை   யாழுந்தேவன்முன்னாலே
யாசிப்பவர்க்கெல்லா   மருள்செய்துபுவிமேலே
அருமையுடநிசை   பரவுபுகளுடன்
பெருமையாகநற்   கருணைமிஞ்சிய   (காரு)

மாருகுலைச்சிறைநீக்கி   மானிலந்தனின்மாரி
துங்கமாய்வருஷித்துச   சுகந்தந்திடக்கோரி
வருமையறவர   முறமையாகவே
பரிவுடன்நிதம்   தருசிகாமணி   (காரு)

காராளன்சொல் விருத்தம்.

ஐந்தருநீளவின்கண்ணரசுசெய்தினிதிருக்கும்
யிந்திரதேவேயிங்கேயேதுகாரணத்தினாலே
வந்ததுவுனதுகஞ்சமாமுகம்வாட்டமுற்ற
சிந்தனையுள்ளதெல்லாஞ்செப்புவீரறியத்தானே.

வசனம்.

வாருமையா தேவேந்திர மகாராஜனே நீங்கள் ... லோக த்தைவிட்டு இவ்விடம் வந்தகாரணம் யாது உங்கள் மகுடமுடை பட்டு முகம்வாடியிருக்கின்ற காரணமென்ன யெனக்கு தெரிய சொல்லவேணுமையா தேவேந்திர மகாராஜனே.

தேவேந்திரன் சொல் விருத்தம்.

வழுவில்லாதானைமுதலெரும்பிரான
வல்லுயிர்களானதுகளெல்லாம்வாழ்க
வுழுதுபயிர்செய்துகார்த்தருள்காருள
வுத்தமனேயுக்கிரமபாண்டிமன்னன்
மழைபொழியும்புயல்கடனைத்தளைத்துவந்து
வன்சிறையிலடைத்தென்னோடமர்புரிந்து
வளையெறிந்துமணிமகுடம்சிதறசெய்தான்
வாசகந்தந்தேனதையும்மறுத்திட்டானே.

வசனம்.

கேளும் வேளாளமன்னனே இந்த மதுராபுரியாளப்பட்ட வு க்கிரகுமாரபாண்டியன் பொதிகைக்கு வேட்டையாட போனவன் அவ்விடத்தில் சஞ்சரிக்கின்ற யென்னுடைய மேகங்கள்நான்கையு ம் பிடித்துத் தளைத்துவந்து சிறைக்கூடத்திலடைத்தான் அச்சமா சாரமறிந்து நான்வந்து மேகங்களை விடும்படிகேட்க அவன்விடுகி றதில்லையென்று யென்னோடமர்புரிந்து மகுடபங்கம்செய்தான் அ த்தையும்பொருத்து விசுவாசித்து நிருபமெழுதினேன் அப்படியு ம் மேகங்களை விடுகிறதில்லையென்கிறான் யினி யென்னசெய்யலா ம் காருளமன்னனே.

காருளன் விருத்தம்.

உம்பர்நாயகனேகூட்டவுக்கிரமபாண்டிமன்னன்
அம்பிகையின்றபாலனுங்கையால்வெல்லமாட்டாய்
இன்பமாய்ப்பிணையுரைத்துயெளிலியைவிடுதத்தாரேன்
துன்பமில்லாமலேகிசுகமுடனிருப்பீர்தானே.



வசனம்.

கேளுமையா தேவேந்திர மகாராஜனே யிந்தவுக்கிரகுமார பாண்டியன் சொக்கநாதக்கடவுள் குமாரனானபடியாலும் சோம வாரவிரதமான்மியத்தாலும் அவனை யாவராலும் வெல்லக்கூடா து வுங்களுக்காக யான்போய் பிணைசொல்லி மேகங்களை விடுவித் துவிடுகிறேன் நீங்கள் தெய்வலோகம்போய்சேர்ந்து யென்வசன த்துக்கு குறைவுவராமல் பாண்டியநாட்டுக்கு மாரிவருஷித்து வா ருங்களையா தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன்சொல் வசனம்.

அப்படியே உன்வசனத்துக்கு குறைவில்லாமல் மதுரைநா ட்டுக்கு மாதமும்மாரி வருஷித்துவருகிறேன் காருளமன்னனே.

காருளன் விருத்தம்.

மன்னமன்னர்கட்கெல்லாம்வணங்கிடாமுடிபுனைந்த
தென்னவானமதுநாடுசெல்வமறவிருக்கயிப்போய்
பொன்னகருறும்யிந்திரன்புயரனைத்தளைந்துகொண்டால்
என்னமாவுயிர்களுய்யுமிவ்வுலகத்திறுமே.

தரு - ரா - முகாரி - ரூபகம்.

கண்ணிகள்.

மன்னுகூடற்றென்னநம்மமாளிலங்கவெங்கும்
மாரியில்லாதாலேமிகவாடுதுயிரெல்லாம்
தன்னுயிர்போல்மன்னுயிரைத்தக்கார்த்திடவென்று
சாஸ்த்திரங்கள்முறையாகவேசாற்றவரியீரோ
முன்னுளிறிற்சக்கரவர்த்திமுதில்பொளியாதாலே
முக்கியமாத்தவமிருந்துமூவுலகமெங்கும்
ஆகாயத்துக்கங்கைதன்னையழைத்தேமிகவிடுத்து
அத்திமுதலெரும்பீருளவானவுயிர்காத்தார்

வானோக்கியேயுயிர்வாழ்ந்திடுமன்றுவுமென்செங்கை
கோனோக்கியேகுடிவாழுமேகுவலயத்திலென்னுள்
குடிகடமைக்கார்த்தோம்பியேகுற்றங்களைக்கடிதல்
வடிவின்றியேவேந்தன்றொழில்கடல்வென்றிமன்னு
கொடுங்கோல்மன்னர்நாட்டிலமிகக்குடியிருப்பதொளிய
கடும்புலிகள்வாழுகின்றகானமகலமென்பார்
மனுநெறிகள்தவறுமலேமதுரைநகருழும்
மதிகுலத்திலுதித்தரசிமாறாயிப்போதேறாய்
கார்கள்சிறையிடுவீரிந்தரன்களமதுரைதனிலே
மாரிபொழியாதுவிடில்மன்னுபிணையானே.

வசனம்.

வாருங்களையா சுவாமி, வக்கரகுமார பாண்டியராஜனே நமது மதுரைபுரிநாடெல்லாம் மழையில்லாமல் சகலபிராணிகளுந் துன்பப்படுகிறது தங்களுக்குத் தெரிந்திருந்தும் யிப்படி மேகங்களைச் சிறையிட்டிருப்பது தருமமல்ல மேலும் வுலகத்தைரக்ஷிப்பது அரசர்க்குரிய கடமையாகையால் யிப்போது தேவேந்திரன்கார்களை விட்டுவிடவேண்டியது அவ்விந்திரன் நமதுநாட்டுக்கு மழை வருவிக்காவிடில் நானே ஜாமீன்தாரியாவேன் கிருபைசெய்து யென்வசனத்தையேற்று மேகங்களை விட்டுவிட வேணுமையா பாண்டியராஜனே.

பாண்டியன் விருத்தம்.

சொற்றவறுக்காராளகுலத்தில்வந்தசுந்திரனே
யெவ்வுயிர்க்கும்வருமைதுன்பம
உற்றபொழுதுதவிசெய்துயிடுக்கண்டீர்க்கும்
உன்மரபல்லாதுவேறொருவரில்லை
வெற்றியுடன்கார்கார்த்துமாரிதந்தவேளாள
மன்னனென்றுபுகளநாளும்
சற்றுன்மொழிமருக்காமற்கார்கடன்னைத்
தளைவிடுத்துத்துரிதமொடுதருகுவேனே.



பாண்டியன் சொல்தரு - ராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

பல்லவி.

காருளகுலயோகனேவுந்தன்கருணைமிகுமொழியைத்
திறமையுடன்மதித்தேன் (காரா)

அனுபல்லவி.

சிறுப்புவியுழுதுசெய்யும்பயிர்த்தொழிலாற
சிரப்பதுமகில்வுட நிருப்பதுமறனெறி யுரைப்பதுபுக
ழெங்கும் விரிப்பதுங்கங்கைபெருங் (காரா)

சரணங்கள்.

மன்னர்மாமுடிகளெல்லாமுனதுடைய
வயன்முடிக்கிணைசொல வியலுண்டோவுலகுள
வுயிரெலாபொசித்துனன் நயம்பெறவாழுமே (காரா)

ஏர்பூட்டாதிருந்தாலே மன்னர்மன்னர்கள்
இரதமுமறையோர்கள் விரதமுமுறவினர்
சரதமுமாகாயப் பரிதிதேர்பூட்டனே (காரா)

எருதுதிருத்துமுளைக்கோல் வேந்தர்கள்செங்கோல்
எங்கனுநெரியொடு துங்கமதாகவே பொங்கநடாத்தி
விளங்கவழங்குமே (காரா)

உன்கரமேழியினல் சகலவுயி ருய்வதுஞ் சிரப்புக
ளெய்வதும்வேள்விகள் செய்வதும்மாரிகள்
பெய்வதும்புவியினில் (காரா)

கைவிரைதெய்வமல்லால்வேறுதெயவங்
காக்குமோவுணவையுண் டாக்குமோபசிமுகம்
பார்க்குமோவருமையைத் தீர்க்குமேதிடமிகுங் (காரா)

அரசர்போருயிர்வதைக்கும் உலகுதிற்பயே
ரானதுவளவிலா ஞானமுங்கலைபலக் கியானமுமருசுவை
தானமுமீயுமே (காரா)

விளைவுசெய்பொலிவளர்ந்தாலொருவனுக்கு
வேதமும்பரதசங் கீதமுஞ்சகலவி ஞேதமும்நன்முன
நீதமும்வளருமே (காரா)

மிக்கபுலவனுக்காய் சிவிகைதனை
வேசியின்மனைமட்டும் மாசொன்றில்லாமலே
காசினிபுகழ்ந்திட வாசையாய்தாங்கிய (காராள)

சென்னியிற்கொட்டும்விறற்கும் பொற்கணையாளி
சேரவேயவன்மனந்தேரவே நற்கவிகூரவே
பெரும்புகழ் நேரவேசெய்திட்ட (காரா)

வண்டமிளோனுதைக்க அவன்காலுக்கு
வாகொடுதண்டையை வேகமதாகவேதாகமாச்
செய்துட் நாகவேதாகிட்ட (காரா)

கவியுணர்புலவனுக்காய் யிருகரத்தைக்
கனமிகுபுத்தினிற் றுணிவுடனிட்டேவரத் தினமணியா
வுதவ் தன்துநன்னெறியாலே (காரா)

தங்கத்தால்முருகரி கவிவாணர்க்குத்
தானிட்டுப்பொசித்தபின் னேதிட்டமொடுஜல
மேயிட்டுமேவருண்ட வாய்தொட்டுக்கழுவிய (காரா)

இடுக்கங்கள்வரும்பொழுது வுணதுமர
பியல்பினையறிந்துநம் செயலைதுதருமவரும் பயம
கற்றிரெகல்ல நயம்பெரச்செய்யுமுயய (காரா)

யென்றும்புகழ்விளங்க யிப்போதுநீவந்
திந்திரன்வேண்டவு மெந்தனுக்கினிதுடன்
சொந்தமாய்ப்பிணைசொல தந்தனுன்மொழிவெழி (காரா)



## பாண்டியன் வசனம்.

கேளும் வேளாளமன்னனே அந்ததேவேந்திரன் செய்த கபடமார்க்கத்திற்கு அவனைப்போல அநேக யிந்திரர்கள் கூடிவந்தாலும் மேகங்களை விடப்போகிறதில்லை நீ யிப்போது வேளாண்மை செய்து சகலஜீவன்களையும் ரக்ஷிக்கும் வுத்தமகுலத்திற்பிறந்த சத்தியவாசகனுனபடியால வுன்வாக்கியத்தை வேதப்பொருளாக மதித்து மேகங்களை விட்டுவிட்டு நீ வுன்ஆசிரமம்போய் சுகமாய் வாழ்ந்திரும் காராளமன்னனே.

## பொது விருத்தம்.

காராளமன்னனுரைப்படியேதென்னன்
களிப்புடனேகார்கடனைவிடவேயிந்திரன்
சீரானமதுரைநகர் தன்னிலேதான்
திங்கள்மும்மாரிபெய்துசெல்வமோங்கத்
தாராறும்பாண்டியனுஞ்சோமவாரந்
தனைநோற்றமான்மியத்தால்மனைவியாட்குப்
பூரணகெற்பந்துலங்கத்தாதியோடு
பூவையெனுங்காந்திமதிபுகலுவாளே.

## வசனம்.

இந்தப் பிரகாரம் கங்காபுத்திரனுகிய வேளாள கோத்திரன் தேவேந்திரனுக்குப் பிணைநின்று பாண்டியரிடத்தில் மேகங்களை விடுவித்துக்கொடுக்க தேவேந்திரன் சந்தோஷமுற்று மதுரைநாட்டுக்கு மழைவருஷிக்க சகலவிளைவுகள் மிகுந்து செல்வத்தோடு இருக்குங்காலத்தில் வுக்கரகுமார பாண்டியன் சோமவாரவிரதம் அனுஷ்டித்துவந்த நோன்மையினுலே அவர் மனைவியாகிய காந்திமதியம்மனுக்குப் பூரணகெற்பம்நிறைந்து தன் தாதிகளோடு சொல்லுகிற விதங்காண்க.

காந்திமதி விருத்தம்.

என்னுயிர்த்தோழிமாரேயேதுநான்செய்வேனையோ
மன்னியென்வயற்றுக்கெற்பவாதையுமிகுத்திப்போது
அன்னமுங்கசந்துமெத்தவுமடிவயருளைக்குதெந்தன்
மன்னனைக்கண்டாற்பொல்லாமருந்தெனத்தோற்றுதம்மா.

தரு - ராகம் - முகாரி - அடதாளம்.

கண்ணிகள்.

பாங்கிமாரேயென்னசெய்வேனையோ யிரு
பக்கமெல்லாமெத்தநோகுதடி

தாங்கியென்னைக்கிட்டநில்லுங்கடி வேர்வை
தானடங்கதுகிலால்வீசுங்கடி

அங்கமெல்லாங்குளிராகுதையோ பெருத்த
வடிவயறுமெத்தநோகுதடி

கண்களிருளோடுமுழுதடி கண்ணட
கால்குடைச்சலதந்துபோடுதடி

வெருத்தமண்மாகக்காணுதடி ஆசை
மெத்தமெத்தபலதிறமேறுதடி

மருத்துவங்கள்நன்றாயப்பார்த்திடவே ஒரு
மெய்வாசதன்னைத்தேடியழையுங்கடி.

மருத்துவக்கிளவி விருத்தம்.

காந்திமாமதியாமங்கைகற்பவேதனையினாலே
சோர்ந்துதானிருக்கும்போதுகருண்டவெண்மயிருமுக்கில்
ஏந்தியவூளைக்கண்ணிற்செரிந்தியபூழையோடு
வாய்க்திடுந்தடியுமூன்றிமருத்துவமாதற்றுளே.



மருத்துவக்கிழவிவருகிற தரு - ரா - மோகனம் - அடதாளம்.

தொண்ணூற்றோராமவருடவயதுசென்ற
கொங்குதனத்துக்கிழவிவந்தாள்
கண்ணிற்பீளையொடுசென்னிநடுங்கிடக்
கையிற்பெரியதடியூன்றி
ஈளையிருமலுங்கோளைமிகத்தாரி
யெங்குஞ்சொரிந்துதடுமாறி
வேளையறிந்துமருத்துவம்பார்த்திட
விந்தையாய்க்கிழவியுந்தோன்றினாள்
துருக்கமறுக்கக்குழவிகிடந்தாலும்
குற்றமில்லமலேபெற்றிடச்செய்யும்
பொருக்காவலிக்கிமருந்துபலகண்ட
பொக்கைவாய்க்கிழவியுந்தோன்றினாள்.

மருத்துவக்கிழவிசொல் விருத்தம்.

ஆரடியம்மாயென்னை அழைத்ததோர்காரணத்தைக்
கூறடிதலைச்சனைகுழந்தையானாலுமல்ல
நேருடன்பார்த்துப்பிள்ளைநிமிஷத்தில்விழச்செய்வேன்
பாரினிலெனைப்போலாரும்பார்ப்பவரில்லைதானே.

கிழவி வசனம்.

ஆரடி அம்மா பேத்தி யென்னையேது அழைத்தது ஆருக்குப் போதுகாலம் இந்தமதுராபுரியில் என்னைப்போல மருத்துவத்தில் கைகண்டவர்கள் ஒருவருமில்லை தலைச்சன்பிள்ளையானாலும் வருத்தமில்லாமல் பிரசவிக்கச்செய்வேன் சொல்லுமம்மா பேத்தி.

தோழிசொல் விருத்தம்.

மருத்துவம்பார்க்கவந்தமாதாவேமதுரையாளும்
பெருத்தகன்முடிபுனைந்தபெம்மானுக்கரமாரேந்திரன்
திருத்தமாய்மணம்புணர்ந்ததேவியாங்காந்திமங்கை
வருத்தத்தைநீக்கிநல்லமைந்தனைப்பெறச்செய்வாயே.

வசனம்.

சேளுமம்மாபாட்டி நம்மவுக்கரகுமார மகாராஜா பத்தினியா ன காந்திமதியம்மாளுக்கு சோமவாரவிரத மருத்துவத்திலே பூரணசெற்பமுண்டாகி வருத்தப்படுகிருள் நீ நன்ருய் மருத்துவ பார்த்து குழந்தை பிரசவிக்கச்செய்யும்மா பாட்டி.

மருத்துவச்சி பேரால் வசனம்.

அப்படியே பிரசவிக்க செய்கிறேனடி பேத்தி.

காந்திமதி விருத்தம்.

அன்னையேயென்னசெய்வேனடியருளைக்குறையோ
யெண்செனமமெடுத்துப்பிள்ளைபெற்றதுபோதும்போதும்
மன்னவனைசைவேண்டேன்மைந்தனாசைவேண்டேன்
யென்னையும்பாதுகார்த்துயித்துயிர்நீக்குவாயே.

தரு - ரா - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

வதோபொந்தன்வயர்வலிக்குதடி யிப்போ
யென்னநான்செய்குவேனன்னையரேசும்ம — யேதோ

சூதுகள்செய்யாதேதுன்பங்களாகுது
பாதுகள்சொல்லடிபஞ்சமாபாதகி — யேதோ

அன்னையபிடிக்குதென்னாவிபதருது
பிள்ளையாசையெனக்கில்லையில்லைசொன்னேன் — யேதோ

பஞ்சுடைத்தாப்போலேபக்கம்வலிக்கிது
நெஞ்சினில்முட்டுதுமிறக்கவுங்கூடலை — யேதோ

நாயகனைக்கண்டால்நஞ்சாயிருக்குது
பாயாசமுண்டாலும்வாய்கசப்பாகுது — யேதோ



பெண்டுகள [illegible]பிறக்கவும்போகாது
கண்டதாலுற்பிள்ளைகாணுவிடிற்ருல் [illegible] — யேதோ

காந்திமதிசொல் அ[illegible].

அன்னையேயின்றே — யாருட[illegible]லி
யென் னுயிர்காப்பே — நீப்பொ[illegible]னக்கு
மருந்துதானிலேயோ — [illegible]ன்னிற
பிறந்தயான்பிள்ளை[illegible] — [illegible]பற்றதுபோதும்
கத்தரிக்கோலால் — கத்தரிப்பதுபோல்
[illegible]த்தவலிக்குது — விடாமலேயென்னைத்
தாங்கிப்பிடியடி — சலித்திடவேண்டாம்
ஓங்கியென்னடிவய — றளைக்குதென்னம்மா
மார்பினில்முட்டுது — மற்றெங்குமில்லை
பார்தனில்பாலன் — பாங்குடனுதிக்க
நலந்தருஞ்சொக்க — நாதர்மீனாக்ஷி
குலதேவதையை — கும்பிடும்தாயே.

பொது விருத்தம்.

துதிமிகுசோமவாரந்தூயதோர்விரதங்கன்ருல்
கதிரவனொளியைப்போலகாந்திமாமதிவயற்றில்
மதுரைமண்டலத்தையாளவல்லமையுடையநல்ல
சுதன்மிகவுதித்தானென்றுதோகையுமகிழ்வானே.

தரு - ரா - தோடி - ஆதிதாளம்.

பல்லவி

அம்மாயெந்தனுக்கொருஅருமைப்பாலன்பிறந்தான்
செம்மையுடன்மதுரைதேசமதனையாள — அம்

அனுபல்லவி.

சொக்கிறுபதத்தைத்தொழுதுதுதிகள்சொல்ல
திக்குள்ளமன்னரைஜெயம்பெற்றிடவேநல்ல — அம்

சரணங்கள்.

சோமவாரவிரதம்துடங்கும்நேர்மையினாலே
பூமியெங்கும்புகழ்பூரணமதிபோலே — அம

இந்திராதிதேவர்களேவல்செய்துமதிக்க
சுந்தரரம்பையர்சோபனங்கள்துதிக்க — அம

கன்னல்வில்மதனனுமன்மனதுநாண
மன்னன்பாண்டியராஜன்மகவுடனேகாண — அம

பொது விருத்தம்.

பாரினில்வந்தவதரித்தமைந்தனுக்கு
பரிவுடனேசாதகமும்மெழுதிவைத்து
வீரபாண்டியனெனவேநாமமோதி
விளங்குநவமணியிழைத்ததொட்டியேற்றி.
தீரனெனுமுக்கரகுமாரமன்னன்
தேவியாள்காந்திமதிமாதுங்கூடி
சேரனின்றுமனமகிழ்ந்துபாலனுக்கு
சிறப்புடனேபுகழ்ந்துதாலாட்டினாரே.

தாலாட்டல்.

ராரிவரோ ராரிவரோ ராரிவரோ ராரிவரோ
சீரானதென்மதுரைதேசமதையாளவந்த
தாரரும்பாண்டியனார்தனையனேகண்வளராய் — ராரி
சொக்கர்மீனாக்ஷிதுணையடிகளென்னாளும்
மிக்கவேதுதிக்கவந்தவீரனேகண்வளராய் — ராரி
சோமவாரத்துத்தூயவிரதமதால்
நேமமாவந்துதித்தத்தனேகண்வளராய் — ராரி
தேவேந்திரன்மகுடஞ்சிதரவேவளையறிந்த
கோமான்றவத்துதித்தகுழந்தாய்நீகண்வளராய் — ராரி
பாராளுமன்னர்பணிந்துமுடிவணங்குந்
தீரமிகுகுலத்துச்செல்வனேகண்வளராய் — ராரி



பொது விருத்தம்.

தாருட்டிப்பாலகனையெடுத்தணைந்து
தனதுவிம்முமுலையமுதுகொடுத்துநாளும்
சீருட்டிவளர்த்தியம்பொற்றணைமேலிட்டு
சிலம்புசிறுசதங்கையுங்கிண்கிணிகள்பூட்டி
பாரோடிவிளையாடமகிழ்ந்துகூடத்
பதியதனிலுக்கிரகுமாரமன்னன்
காரேட்டுங்குழல்காந்திமதியாளோடு
காசினியிற்சிறந்திருந்தார்கழிக்கத்தானே.

வாழி விருத்தம்.

ஆதிஜெகதீஸ்பரனும்வாழிவாழி
அங்கயற்கண்மீனாக்ஷியம்மைவாழி
சிதாகிந்திரன்முனிவர்தேவர்வாழி
திருநாவிலிலகுகலைமாதுவாழி
வேதமறையோருலகஞ்செழிக்கவாழி
விளங்கவிந்தக்கதையுரைப்போர்கேட்போர்வாழி
நீதிலாக்காராளகுலமும்வாழி
தென்னவன்செங்கோல்நிதமும்வாழிமாதோ.

மங்களம் — ராகம் — சாவேரி.

மங்களம்மங்களம்ஜெயசுபமங்களம்மங்களம்
மங்களம்சொக்கநாதருமீனாக்ஷிக்கும்
துங்கக்கணபதிக்குஞ்சுப்பிரமணியர்க்கும் — மங்க
திருமாலையனுக்குஞ்செந்திருமாதுக்கும்
நறைகமலாசனமந்தணுஞ்சரஸ்வதிக்கும் — மங்க
பொதிகைமலர்ந்திற்கும்பூலோகத்துள்ளோர்க்கும்
மதுரைப்பாண்டியனுக்கும்மாதுகாந்திமதிக்கும் — மங்க
கழிப்பொடுமழைதந்தகாராளகுலத்தோர்க்கும்
பழிப்பில்லாவிக்கதைபடிப்பார்கேட்பாருக்கும் — மங்க

காராளன் கார்காத்த நாடகம் முற்றிற்று.

---

PRINTED AT THE "LITERARY SUN PRESS," COIMBATORE.